DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1418
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday June 9, 2023

# "அரசாங்கத்துடன் இனி பேச்சுக்கு இடமில்லை"

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் அறிவிப்பு

(யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்)



இலங்கை அரசுடன் இனி பேச்சுவார்த்தைகள் இல்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரான இரா சம்பந்தர் அறிவித்துள்ளார்.

"இனஅழிப்பிற்கு நீதியான விசாரணை இல்லை, பேச்சுக்களில் தீர்வில்லை எனவே இனி எந்தப் பேச்சிலும் நாம் கலந்துகொள்ளப்போவதும் இல்லை" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவிடம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதிபடத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கும் இடையே நேற்று வியாழக்கிழமை (மாலையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே சம்பந்தர் இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

# தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருதினைப் பெறுவதற்கு காரணமாக விளங்கிய நூலை எழுத நான் 16 வருடங்களை ஒரு தவமாக ஏற்று வெற்றியைத் தழுவியுள்ளேன்

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6866 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com



"உலகத் தமிழ் படைப்பாளிகளின் கனவாகவும் எதிர்பார்ப்பாகவும் திகழும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருதினைப் பெறுகின்ற தகைமையை நான் பெறுவதற்கு காரணமாக விளங்கிய "இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு" என்னும் நூலை எழுத நான் 16 வருடங்களை ஒரு தவமாக எடுத்துக் கொண்டு எழுத்துப் பணியை மேற்கொண்டதால் இன்று வெற்றியைத் தழுவிய ஒருத்தியாக உங்கள் முன்னாள் நிற்கின்றேன்."

## கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் விருதினைப் பெற்றுக் கொண்ட எழுத்தாளர் சிவசங்கரி உருக்கமான உரை

இவ்வாறு கடந்த 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற "தமிழ் இலக்கியத் தோட்ட"த்தின் 2022 இலக்கிய விருதுகள் வழங்கும் விழாவில் மேற்படி "இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு" என்னும் நூலை எழுதியமைக்காக "இந்திய இலக்கிய தரிசன விருது" என்னும் உயரிய கௌரவத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் உரையாற்றியபோது உருக்கத்துடன் தெரிவித்தார் எழுத்தாளர் சிவசங்கரி அவர்கள்.

(உள்ளே விபரமான செய்தி 29ம் பக்கத்தில்)

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004

# UTHAYAN INTERNATIONAL AWARD FESTIVAL - 2023

# உதயன் சர்வதேச விருது விழா 2023

## PRESENTED BY

VIBRANT HOSPITALITY GROUP
DEVELOPMENT MANAGEMENT
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
416 270 4343
shankar@vhgcanada.com
vibranthospitalitygroup.com
Toll Free 1 888 674 7770 Local: 905 769 1509

ARABI
RAGEEF SUBRAMANIAM PRESENTS
FINDER
PROJECT ONE

Latika Gold House
(647) 996 5922
www.latikagoldhouse.ca
L7-2900 Markham Road
Scarborough ON M1X 0C8

WINSMART
FACILITY MAINTENANCE SERVICES
President:
Kamalraj Kathirkamanathan
416 821 7870

## CO-PRESENTED BY

K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA

Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesan Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5

SIVA & JOY REAL ESTATE TEAM
#1 HOMELIFE TEAM IN ONTARIO
KNOWLEDGE · EXPERIENCE · SUCCESS
Siva Shanmuganathan
Joy Selvanayagam
416.545.7482
HomeLife Future Realty Inc., Brokerage

BUY | INVEST | SELL
Happy Home Peace of Life
RECASH REALTOR
RAJEEV SEBARASHA
REALTOR
www.recashrealtor.com
905.226.8515 RE/MAX

CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7

President & C.E.O
Kula Sellathurai
Netwyn.Place

UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2023

## ASSOSIATE SPONSORS

அனுபவமிக்க MORTGAGE முகவர்
For All Your Mortgage Needs
DIANA LOUIS
Mortgage Agent/ Team Lead Level 2
416.770.5533
dianalouis.mortgages@gmail.com
MORTGAGE ALLIANCE

MAHAANS PICK & PRESS OIL MILL INC
AND BULK FOOD STORE TEL-416-293-4010

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone : (416) 993-0826
Fax : (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

Residential & Commercial
Real Estate Services
எண்ணை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

Remitbee
ONLINE MONEY TRANSFER

AGA BEAUTY LEARNING ACADEMY & SPA
Sasi Naren
Managing Director
Lecturer / Instructor
647.716.5252
3 LOCATIONS TO SERVE YOU
agabeautyacademy@gmail.com
A14, L5 - 2900 Markham Road,Scarborough ON M1X 0C8

## JUNE 18TH 2023 Sunday, 6.00 PM

## THIS YEAR'S AWARDS ARE...

## இவ்வருடத்திற்குரிய விருதுகள்...

- UTHAYAN LETERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER - COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
- UTHAYAN LEADERSHIP AWARD - ONTARIO
- UTHAYAN YOUTH ICON AWARD - ONTARIO
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - EUROPE
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - TAMIL NADU

## Scarborough Metropolitan Centre

3840 Finch Ave E, Scarborough, ON M1T 3T4 FOR TICKETS : 416 732 1608

SANTHA
GENERAL CONTRACTING SERVICES
24 HRS EMERGENCY SERVICE
WWW.SANTHA.CA
416-200-5470

Thanjai
Restaurants | Snacks | Catering | Party Hall

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# அரச பயங்கரவாதத்தின் துப்பாக்கிகளுக்கு இரையான தந்தையின் தனயன் அதே துப்பாக்கிகளுக்கு முன்பாக நெஞ்சைக் காட்டியது குற்றமாம்!

'பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காலையில் கைது. மாலையில் விடுதலை' என்ற எமது யாழ்ப்பாணச் செய்தியாளரின் செய்தி. கஜேந்திரகுமாரைக் கைது செய்தமைபோன்று, இனிமேல் சாதாரண பொது மக்களுக்கும் நடக்கும் என்ற எச்சரிக்கையின் ஆரம்பம்' என்று அர்த்தப்பட எழுதியுள்ள நிலாந்தனின் கட்டுரை. போன்ற பல செய்திகளும் கட்டுரைகளும் இவ்வாரப் பதிப்பின் உள்ளே பக்கங்களில் காணப்படுகின்றன.

அன்று அரச பயங்கரவாதத்தின் துப்பாக்கிகளுக்கு இரையான தந்தையான குமார் பொன்னம்பலம் அவர்களின் தனயனான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் அவர்கள். இன்று அதே துப்பாக்கிகளுக்கு முன்பாக நெஞ்சைக் காட்டி நின்று நீதி கேட்டது தென்னிலங்கையைத் தாக்கியுள்ளது. அதன் விளைவாக இடம்பெற்ற சம்பங்களும் தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்படுவதுமாக இந்த வாரம் அச்சத்தின் மத்தியிலும் சற்றுத் துணிச்சலுடனும் நகர்ந்து செல்கின்றது.

அரசாங்கத்தின் மக்களாக விளங்கும் நாட்டு மக்களில் இனங்களின் அடிப்படையில் காவல்துறையினர் பணியாற்றுவதும் அதுவும் யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்தும் அரசாங்கத்தின் அடக்கு முறையிலிருந்து முற்றாக வெளியேறு முடியாத பாதிப்புக்களுடன் தங்கள் தாயக மண்ணில் வாழும் தமிழர்களுக்கு தொடர்ந்து தொந்தர செய்யவும். தட்டிக் கேட்டால் துப்பாக்கியை நீட்டுவது போன்ற சம்பவங்கள் நமது மண்ணில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவற்றை தட்டிக் கேட்பதற்கு ஆட்கள் இல்லாததால் மக்கள் என்னும் 'ஆட்டுக்குட்டிகள்' அரசபயங்கரவ ாதத்திற்கு இனியும் இரையாகிப் போய்விடக்கூடாது என்பதில் அக்கறை கொள்ளும் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் எமக்கு உடனடியாகத் தேவை.

குமார் பொன்னம்பலம். ரவிராஜ் போன்றவர்களின் வரிசையில் அடுத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தால் எமது மக்களும் தலைவர்களும் என்ன செய்யலாம் என்பதை இப்போதே முடிவெடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு முதற்படியாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் அவமதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தற்போது வடக்கின் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களைத் தவிர்த்து) தமது பதவியை இராஜினாமாச் செய்து நீதி கேட்டு இதய சுத்தியோடு போராட்டத்தை நடத்தும் அரசி-யல் அத்தியாயம் உடனடியாக எழுதப்பட வேண்டும் என்பதே எமது இவ்வாரத்தின் கதிரோட்டத்தின் வாயிலா விடுக்கும் நியாயமான வேண்டுகோள் ஆகும்.

# அல்பேர்ட்டா மாகாணத்தில் தொடரும் காட்டுத் தீயின் மோசமான பரவலால் கனடா அமெரிக்காவின் சில பகுதிகளில் வளிமண்டல பாதிப்பு

## நோய்கள் பரவலாம் என்ற அச்சத்தை வெளியிட்டுள்ள கனடிய – அமெரிக்க சுகாதார அமைப்புக்கள்

(பின் பக்கத் தொடர்ச்சி)



கனடா அல்பேர்ட்டா மாகாணத்தில் கடந்த சில மாதங்களாகத் தொடரும் காட்டுத் தீயின் மோசமான பரவலால் கனடா அமெரிக்காவின் சில பகுதிகளில் வளிமண்டலத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை மக்கள் நன்கு உணரக்கூடியதாக இருப்பதாகவும் இதனால் இரண்டு நாடுகளில் சில நகரங்களில்நோய்கள் பர-வலாம் என்ற அச்சத்தை வெளியிட்டுள்ள கனடிய மற்றும் அமெரிக்க சுகாதார அமைப்புக்கள் மக்களை கவனமாக இருக்கும் வண்ணம் கேட்டுள்ளன.
மேற்கு கனேடிய மாகாணமான அல்பர்ட்டா முழுவதும் காட்டுத் தீயில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் ஏக்கர் பயிர் விளையும் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் 30,000 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் மற்றும் இந்த வார இறுதியில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்ட பின்னர் எண்ணெய் உற்பத்தி கூட அல்பேர்ட்டா மாகாணத்தில் நிறுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கனடிய மத்திய இயற்கை அழிவுகள் தொடர்பான அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
கனடாவில் மிகப்பெரிய கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் மாகாணமாகத் திகழும் அல்பேர்ட்டா, தீ விபத்துகளுக்கு மத்தியில் 145,000 பீப்பாய்களுக்கு சமமான எண்ணெயின் உற்பத்தியை நிறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது
கனடிய வன சேவையின் ஆராய்ச்சி விஞ்ஞானி மார்க்-ஆண்ட்ரே பாரிசியனின் கூற்றுப்படி, அண்மையில் ஆங்காங்கே மழை பொழிவுகள் இருந்ததால் தீயின் முன்னேற்றம் தடுக்கப்பட்டாலும் , . கூடுதலாக, இந்த வாரத்தின் இறுதியில் அதிக வெப்பமான, வறண்ட நிலைகளை அந்த பகுதிக்கு கொண்டு வரவும், தொடர்ந்து தீயை பரவலின் அபாயத்தையும் கொடுமையையும் மட்டுமே நாம் காண முடியும் என்று எச்சரித்துள்ளார்.
இதே கனடாவின் சில மாகாணங்களில் இடம்பெறும் மோசமான காட்டுத் தீ நிலைமைகள்காரணமாக அமெரிக்கா முழுவதும் விமானங்களை தரையிறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது
வட அமெரிக்காவில் கிட்டத்தட்ட 100 மில்லியன் மக்கள் மிகவும் மோசமான தரமற்ற காற்றின் பாதிப்புக்களை அனுபவித்து வருகின்றனர் எனவும் "பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களை இது அப்பட்டமான நினைவூட்டுகின்றது" என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் விவரித்தார்.
.

**Business for Sale**

Scarborough வில்
30 வருடங்களாக இயங்கிவரும்
Auto Parts Rebuilding Company
விற்பனைக்கு உண்டு.

Call:
(416) 543-8170

**Help Wanted**

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

**Room for Rent**

Near 9th Line and Hwy 7 in Markham.
One bedroom with attached washroom available for rent.
Other room is rented by a male who works from home.
Electricity, Wifi, Water, and Parking included.
Rent: $1000.00
515-710-1451

**மணமகன் தேவை**

விரிவுரையாளராக Saskatchewan இல் பணியாற்றும் 33 வயதுடைய 5'8" உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு
1 (306) 914 4830

உ

# றிச்மண்ட்ஹில் பிள்ளையார் கோவில்







## புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

# குடமுழுக்கு விழா

## June 30, 2023 ஆனி மாதம் 16ம் நாள் வெள்ளிக்கிழமை

## நேரம்: காலை 9:45 மணி முதல் 11:05 மணி வரை

பேரன்புமிக்க மெய்படியார்களே!

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியான வரும் பரம கருணா மூர்த்தியாகிய இறைவனால் படைக்கப்பட்டதாகிய இப்பரந்த பூவுலகில் இயற்கை எழிலுடன் அமையபெற்றதுமான வட அமெரிக்கா கண்டம் எனபோற்றப்படுகின்ற வந்தாரை வாழவைக்கின்ற கனடா என்னும் அழகிய திருநாட்டில் பல்தேசங்களிலிருந்தும் புலம்பெயர்ந்து வந்து வாழும் மக்கள் அனைவரும் தத்தமது கலாச்சாரங்களை பேணி வளர்த்தும் இன, மொழி, மத வேறுபாடுகளின்றி அனைவரும் ஒன்றுபட்டு ரொறன்டோ, மாநகரில் ஹிச்மண்ட் ஹில் செல்வமலையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைய பெற்ற புண்ணிய க்ஷேத்திரமான பிள்ளையார் கோவில் 'Ganesha Temple' என அழைக்கப்படும் மூன்று அழகிய ராககோபுரங்களுடன் அமையப்பெற்ற இந்து ஆலயத்தில் ஸ்வத்திஸ்ரீ மங்கள கரமான சோபகிருது வருஷம் ஆனிமாதம் 16ம் நாள் 30-June - 2023 வெள்ளிக்கிழமையும், அனுஷ நட்சத்திரமும், வளர்பிறை துவாதசி திதியும் சாத்ய யோகமும், பாலவ கரணமும் சித்த யோகமும் கூடிய காலை 9:45 மணிமுதல் 11:05 மணி வரையுள்ள சிங்கலக்ன சுபமுகூர்த்தத்தில் அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயக பெருமான், ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்ரமண்யசாமி ஸ்ரீ திரிபுர சுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரப் பெருமான், ஸ்ரீ பூமிநீலா சமேத ஸ்ரீ பிரசன்ன லக்ஷ்மி வெங்கடேச பெருமாள், ஸ்ரீ துர்க்கா தேவி மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் அழகிய முப்பெரும் ராஜகோபுரங்களுக்கும் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

21 - 06 - 2023 புதன்கிழமை முதல் நடைபெறும் பூர்வாங்க கிரிகைகளிலும்
27 - 06 - 2023 செவ்வாய் மாலை முதல் நடைபெறும் யாக பூஜைகளிலும்

28 - 06 - 2023 புதன்கிழமை காலை 7மணி முதல் இரவு 9மணிவரையும்
29 - 06 - 2023 வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரையும்
நடைபெறும் எண்ணெய்காப்பு சாத்தும் வைபவத்திலும்

அடியார்கள் யாவரும் தவறாது கலந்து கொண்டு கும்பாபிஷேக வைபவத்தை கண்டு தரிசித்து அனைத்து தெய்வங்களின் பேரருட்கடாக்ஷத்தை பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழும் வண்ணம் வேண்டுகின்றோம்.



- ஆலய நிர்வாகம்

குவாலிற்றி பிறின்ரிங் 416.281.6554

இந்தியா செய்திகள் India News

# கேரளாவில் வேன் மீது கார் மோதி நகைச்சுவை நடிகர் பலி



கேரளா மாநிலம் கொல்லத்தைச் சேர்ந்தவர் சுதி. பிரபல மிமிக்ரி கலைஞர் ஆவார். மலையாள டிவிக்களில் ஏராளமான நகைச்சுவை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். மோகன்லால் நடித்த பிக் பிரதர், நிழல், கொள்ளை உள்பட மலையாள படங்களிலும் நடித்து இருக்கிறார்.

இந்த நிலையில் ஜூன் 4 இரவு கோழிக்கோடு அருகே உள்ள வடகரையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்று இருந்தார். நிகழ்ச்சியை முடித்த பிறகு ஒரு காரில் சக கலைஞர்களான பினு, மகேஷ் ஆகியோருடன் ஊருக்கு புறப்பட்டார்.

இன்று அதிகாலை சுமார் 4.30 மணி அளவில் திருச்சூர் அருகே கைப்ப மங்கலம் பகுதியில் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த வேன் மீது எதிர்பாராத விதமாக கார் மோதியது. இதில் சுதி உள்பட காரில் இருந்த 3 பேரும் காயம் அடைந்தனர்.

இதை அறிந்த அந்த பகுதியினர் விரைந்து வந்து அனைவரையும் மீட்டனர். தொடர்ந்து கொடுங்கல்லூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நடிகர் கொல்லம் சுதி சிகிச்சை பலனின்றி இறந்தார். மற்ற நடிகர்கள் 2 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து கைப்ப மங்கலம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# "ஒடிசா ரெயில் விபத்தில் பலியானவர்களில் 40 பேர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர்" — அதிர்ச்சி தகவல்

ஒடிசா ரெயில் விபத்தில் இந்தவர்களில் 40 பேர் மின்சாரம் தாக்கியதால் தான் உயிரிழந்து இருப்பதாக கருதப்படுகிறது.

ஒடிசாவில் சென்னை கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரெயில் விபத்தை சந்தித்தபோது 275 பயணிகள் உயிரிழக்க நேரிட்டது. பெரும்பாலானவர்களின் உடல்கள் சிதைந்த நிலையில் மீட்கப்பட்டன. பலருக்கு உடல் உறுப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறிப்பிட்ட ஒரு பெட்டியில் மட்டும் 40 உடல்கள் மீட்கப்பட்டன. அவர்களது உடலில் எந்த காயமும் இல்லை. சிறு ரத்தத்துளிகூட வெளியேறவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கையில் அவர்கள் 40 பேரும் மின்சாரம் பாய்ந்ததில் உயிரிழந்து இருப்பது தெரிய வந்தது.

கோர மண்டல் எக்ஸ்பிரஸ் ரெயில் பெட்டிகள் தரம் புரண்டபோது எதிர்திசையில் வந்த பெங்களூரு-அவுரா எக்ஸ்பிரஸ் ரெயில் பயங்கரமாக மோதியது. அப்போது ரெயில்வே மின்கம்பங்கள் சாய்ந்தன. அதில் இருந்த மின்சாரம் தாக்கியதால் தான் 40 பேர் உயிரிழந்து இருப்பதாக கருதப்படுகிறது.

# தமிழ்நாட்டு சிறைவாசிகளுக்கு புதிய உணவு பட்டியல்!



தமிழ்நாட்டில் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய உணவு முறையை தமிழக அரசு அறிவித்துள்ளது. சிறைவாசிகளின் உணவுமுறை மாற்றம் செய்யப்படும் என அமைச்சர் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி அறிவித்திருந்தார். சிறை கைதிகளுக்கு மாற்றியமைக்கப்பட்ட புதிய உணவு திட்டத்தை சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, புழல் மத்திய சிறையில் துவக்கி வைத்தார். புதிய உணவு முறையில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை உணவாக இனி கோதுமை உப்புமா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திங்கள்கிழமை காலை உணவாக பொங்கல், சாம்பர் வழங்கப்படும் என்றும் செவ்வாய்கிழமைகளில் ராகி உப்புமா, உருளைக்கிழங்கு மசாலா வழங்கப்படும் என சிறைத்துறை அறிவித்துள்ளது.

புதன்கிழமைகளில் தக்காளி சாதம் முட்டையும் வியாழன் எலுமிச்சை சாதமும் வெள்ளிக்கிழமையில் இட்லி சாம்பாரும் சனிக்கிழமைக்களில் புதினா சாதம் வழங்கப்படும் என சிறைத்துறை அறிவித்துள்ளது. மேலும் வாரத்தின் 2 நாட்களுக்கு வழக்கம்போல் அசைவ உணவுகள் வழங்கப்படும் என புதிய உணவு முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் பி கிளஸ் சிறைவாசிகளுக்கு நாள் ஒன்றுக்கு 96 ரூபாயில் இருந்து 135 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஏ கிளஸ் சிறைவாசிகளுக்கு நாள் ஒன்றுக்கு 146 ரூபாயில் இருந்து 207ஆக உயர்த்தப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE


Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3


Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# இந்திய இராணுவத்தின் வாதரவத்தை படுகொலைகள்!

இந்தியா செய்திகள்
India News




வல்லிபுரம் பாலசிங்கம்



தம்பிராசா இலட்சணகுமார்



சடையன் கந்தையா



சின்னவன் சிவபாதம்



தவசி நல்லதம்பி

எங்களின் மண்ணில் அநியாயமாக கொல்லப்பட்ட எம் உறவுகளின் நினைவுத்தூபிகள் எம்மக்களின் கண்முன்னே இடித்து அழிக்கப்படுகின்றன.

ஆனால், அமைதிப்படை என்கிற பெயரில் ஈழத்தில் காலடி எடுத்து வைத்து எம் மக்களை அன்று உயிருடன் கொழுத்திய இந்தியப் படைக்கு, அதன் அதிகாரிக்கு யாழில் நினைவுத்தூபியை பராமரித்து நினைவு கூர்வதில் இந்தியா அதிக அக்கறை செலுத்துகிறது.

இந்திய அமைதிப்படை ஈழத்தில் நடாத்திய காட்டுமிராண்டித்தனங்களை தொடர்ந்தும் நினைவு படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

இந்திய இராணுவத்தின் வாதரவத்தை படுகொலை இடம்பெற்று இன்றுடன் 34 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது, இருந்தும் அவர்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே இன்றும் இருக்கின்றது.

அன்று, 1989 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் 5 ஆம் திகதி விடிந்தும் விடியாத விடிகாலை பொழுது, நடக்கப்போவதை ஏதுமே அறியாத அந்த இரு கிராமங்களும் மெல்ல மெல்ல துயிலெழுந்தன.

யாழ்ப்பாணம் - வாதரவத்தை - நான்கு பக்கமும் உப்புநீரால் சூழப்பட்ட ஒரு சிறியதரைத்தோற்ற அமைப்பை கொண்ட நிலப்பரப்பு. அன்றாட வாழ்க்கையை இக்கிராமமக்கள் கூலி வேலையையும், விவசாயத்தையுமே நம்பி வாழும் சூழல், ஆனாலும் மழை வீழ்ச்சி தொடர்ந்தும் கிடைக்காத காரணத்தினால் முழுதாக விவசாயத்தை நம்பியும் வாழ்ந்துவிட முடியாது.

இதனால் கூலி வேலை என்றாலும், விவசாயம் என்றாலும் அயல் கிராமங்களையே இன்றும் இம்மக்கள் நம்பி வாழ்ந்து வருகின்றனர். “ஒன்பது பேரை இந்தியன் ஆமி பிடித்து அயல் கிராமமான புத்தூர் தகரம் பிள்ளையார் கோவிலடியில் சுட்டுப்போட்டு எரித்து விட்டார்களாம்” என வெளிப்பிரதேசங்களில் இருந்து ஊருக்குள் வருபவர்களால் ஜாடைமாடையாக கசிய விடப்பட்ட செய்தி, ஊர் மக்களையே பதைபதைப்பில் ஆழ்த்தியது.

வாதரவத்தை பகுதி மக்கள் வழமையாக வாதரவத்தை - தகரம்பிள்ளையார் வீதி - புத்தூர் ஊடாக பயணம் செய்வது வழமையாகும். தங்கள் பிள்ளைகள் வேலைக்கு சென்று கொண்டிருக்கும் நேரத்தை ஒவ்வொரு தாய்மாரும் மனக்கண்ணில் எண்ணி பதைபதைத்துக் கொண்டனர்.

கோரமாக சுடப்பட்டு இறந்தவர்களை காண ஊரே திரண்டது. என்மகனா என்று கேட்கும் தாயும், என் கணவனா என்று கேட்கும் துணைவியர்களும் கதறியழுது அவ்விடத்தை நிரப்பி தம் ஒவ்வொரு உறவுகளையும் கொளுத்திய சாம்பலுக்குள் தேடத்தொடங்கினர்.

இந்திய இராணுவத்தின் படுகொலைத் தாக்குதலுக்கு தம்பிராசா- லட்சணகுமார், தளையசிங்கம் - தயானந்தராசா, சுந்தரராசா - வைகுந்தராசா, வல்லிபுரம் - துரைராஜசிங்கம், வல்லிபுரம் - பாலசிங்கம், தம்பிமுத்து - யோகேந்திரம், ஆகிய வாதரவத்தையை சேர்ந்தவர்களும், சம்பவ இடத்தில் தோட்டவேலை செய்து கொண்டிருந்த புத்தூர் கிழக்கு புத்தூர் பகுதியை சேர்ந்த தவசி - நல்லதம்பி (நல்லான்), சின்னவன் - சிவபாதம், சடையன் கந்தையா ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர்.

இறந்து கிடப்பவர்கள் மத்தியில் உறவுகளை தேடுபவர்களுக்கு எரியூட்டப்பட்ட, அரைகுறை எரிந்த உடற்கட்டைகள் தான் மிச்சம் கிடைத்தன.

இந்திய ராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் பற்றி விபரிக்கிறார் இறந்தவர்களில் ஒருவரான சின்னவனின் மனைவி வசந்தலீலா, “தம்பி நாங்கள் அதுல தோட்டம் தான் செய்யிறனாங்கள், எங்கட வீடுகளும் பக்கத்தில தான் இருக்கு. அதுல நாலைந்து வீடுகள் இருந்துச்சு எங்கட நிலையான கல்வீடு.

விடியப்பறம் வந்துட்டாங்கள். என்ர மனுசனையும், மாமாவையும் அவற்ற பெரியப்பாவையும் கூட்டிக்கொண்டு அங்கால போனவங்கள், பொம்பளையள் எங்களை எல்லாம் தகரம்பிள்ளையார் கோவிலுக்க கூட்டிக்கொண்டு போய் விட்டிட்டாங்கள்.

அதே நேரத்தில வாதரவத்தையால வந்த ஆறு பேரையும் பிடிச்சு எங்கட மனுசன் இருந்த இடத்துக்கு கூட்டி போனவங்கள். அதுகளும் மணல் ஏத்தப் போற பிள்ளைகள் எல்லாரையும் சுட்டு சத்தம் கேட்டுது. கொஞ்ச நேரத்துல அவங்கள் வாதரவத்தை பக்கம் போட்டாங்கள். நாங்கள் வெளில வந்து பார்த்தால் எரிச்சுகுறையளாக விட்டுப்போயிருக்கிறாங்கள், அதுக்குள்ள என்ர மனுசனும் இருந்தவர், ஒருத்தரையும் அடையாளம் காண ஏலாம இருந்துச்சு.

நான் தம்பி எண்பத்திரண்டாம் ஆண்டு கலியாணம் கட்டினான். சம்பவம் நடக்கும் போது எனக்கு மூன்று பிள்ளைகள். இருக்கிற வீட்டைக்கூட வேற சொந்தக்காரர் தான் பரிதாபம் பார்த்து தந்தவை”. இவ்வாறு கூறி முடித்ததும் அவரின் கண்களில் கண்ணீர் முட்டியது.

நா தழுதழுக்க அந்த தாயின் வாயிலிருந்து வேறெந்த வார்த்தைகளும் வெளிவரவில்லை.

“யாராச்சும் வந்து கேட்பாங்கள் தம்பி இது யார்கட்டின தூபி என்று. இறந்தவங்களோட நினைவாக இயக்கம் தான் தம்பி அதுல தூபி கட்டினது, உடனையே நான் சொல்லிப்போடுவன் எங்களுக்கு தெரியா என்று. உதுகளால தம்பி கரைச்சல். இருக்கிற பிள்ளைகளையாச்சும் காப்பாத்திட்டேன் என்ற பெருமையோட இனி சாவேன் மோனை”. ஏக்கப் பெருமூச்சுடன் எழுந்து சென்றார் அந்த தாய்.

சுட்டு எரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட அந்த வீதியில் இரண்டு வருடங்களுக்கு மேலாக இரத்தக்கறைகளை காணக்கூடியதாக இருந்ததாக பிரதேச வாசிகள் நினைவுகூர்ந்தனர்.

குறித்த சம்பவத்தில் கணவனை இழந்த யோகேந்திரம் பத்மாவதி கருத்து தெரிவிக்கையில், “எனக்கு தம்பி ஒண்டும் தெரியாது. வழமையா வெளிக்கிட்டு போற போல தான் தம்பி போச்சுதுகள். விடியப்பறம் ஒரு ஐந்து மணி ஐந்தரை இருக்கும். வெடிச்சத்தங்கள் கேட்டுது. நாங்கள் நினைச்சுக்கூட பார்க்கலை எங்கட மனுசனும் அதுக்குள்ளே தான், எங்கட சனங்கள் எல்லாம் போச்சுதுகள் அதுகளோட போய்த் தான் தம்பி தெரியும் அகப்பட்டது என்ர மனுசனும் என்று.

பிறகு தம்பி நாங்கள் வாதரவத்தைல இருந்து அக்காச்சி எழுச்சி கிராமத்துக்கு வந்துட்டம். பிறகு இயக்கம் தான் புது வீடு கட்டி தந்தது. இப்பவும் தம்பி நடந்த சம்பவங்களை நினைக்க உடல் தானாக நடுங்குது”. இவ்வாறு கூறியவாறு கண்களை மறுபுறம் திருப்பி துடைத்துக்கொண்டார்.

புத்தூர் அருகே “கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு” எனும் கிராமம். விடுதலைப் புலிகளால் தத்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு மாதிரி “கம்யூன்”. இந்த கிராம மக்கள் இன்னும் தங்கள் கிராமத்தின் பெயரை “கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு” என பெருமையாக சொல்கிறார்கள். விடுதலைப்புலிகளின் வீட்டுத் திட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட அந்த வீடுகள் மட்டுமே இன்னும் அவர்களின் பாதுகாப்பு அரண்களாக அசையாமல் உறுதியோடு நிற்கின்றன.

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் எவரைக் கேட்டாலும் கப்டன் அக்காச்சி பற்றி “சீவலப்பேரி பாண்டி” கதை சொல்வது போல் கதை கதையாக சொல்கிறார்கள். கப்டன் அக்காச்சி அந்த கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் உண்டு, உறங்கி, தோட்டங்களிலும் வயல்களிலும் மக்களோடு மக்களாக உழுது, உழைத்து அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வாழ்ந்திருக்கிறான் என்பதை அந்த மக்கள் சொல்லும் கதைகளிலிருந்து உணரலாம்.



தளையசிங்கம் ஜெயானந்தராசா

அங்கு 60 வயது நிரம்பிய ஒரு தாயொருவர் கூறுகையில், 1989 ஆம் ஆண்டு. ஆனி மாதம் 5ஆம் திகதி காலையில் தன் கணவனையும் அண்ணனையும் அண்ணனின் மகனையும் ஒரு மருமகனையும் சீமெந்து தொழிற்சாலைக்கு வேலைக்கு அனுப்பி போட்டு பிள்ளைகளை குளிப்பாட்டிக் கொண்டிருந்த நேரம், அக்கம் பக்கமெல்லாம் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. வாதரவத்தை, “தகரம் பிள்ளையார் கோவிலடியில் இந்தியன் ஆமி ஆரையோ சுட்டுக் கொண்டு போட்டாங்களாம்”.



சுந்தரராசா வைகுந்தராசா

“ஆரோ எவரோ பாவங்கள்” என பரிதாபப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அறிகிறார் அந்த தாய்... அது யாருமில்லை அவரின் கணவனும் கணவனோடு போன அண்ணனும் அண்ணனின் மகனும் மருமகனும் அவர்களோடு இன்னும் 5 பேர். எல்லாரும் அரைகுறை எரிஞ்ச நிலையில் தான், கண் கொடுத்து பார்க்கேலாம இருந்தது. என்றார்.

இதேவேளை இந்திய அரசால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நினைவாக தமிழீழ விடுதலைப்புலிகளால் நினைவு தூபி ஒன்று சம்பவம் இடம்பெற்ற தகரம்பிள்ளையார் கோவிலடியில் தொண்ணூறாம் ஆண்டளவில் நிறுவப்பட்டிருந்தது. இறுதிப்போர் நிறைவடைந்ததன் பிற்பாடு இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அந்த நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டது.



வல்லிபுரம் துரைராஜசிங்கம்

என்ன ஒரு ஒற்றுமை! கடல் கடந்து வந்தவர்கள் ஆட்களைக் கொன்றார்கள். தேசம் விட்டு தேசம் வந்தவர்கள் தூபியை உடைத்தார்கள்.

கொல்லப்பட்ட எம் மக்களின் நினைவுத் தூபிகளும் விதைகளாகிப் போன எம் மாவீரர்களின் உறங்கும் இல்லங்களெல்லாம் அழிக்கப்பட...

கொலை செய்தவர்களுக்கு எம் கண் முன்னால் தூபிகள் எழுப்பப்பட்டு கொண்டிருக்கின்றன.

கண்ணீரால் அல்ல செந்நீரால் எழுதிய வரலாற்றை சூழ்ச்சியால் மாற்றி எழுதிட விடுதலும் முறையோ?

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**
**(வாதவூரான்)**



தம்பிமுத்து யோகேந்திரம்

## Seniors' Wellness Club presented Mothers Day and Fathers Day Celebrations Together

# மார்க்கம் நகரில் இயங்கும் Seniors' Wellness Club மூத்தோர் அமைப்பு நடத்திய அன்னையர் தின மற்றும் தந்தையர் தினக் கொண்டாட்டம்








மார்க்கம் நகரில் இயங்கிவரும் **Seniors' Wellness Club** மூத்தோர் அமைப்பு நடத்திய அன்னையர் தின மற்றும் தந்தையர் தினக் கொண்டாட்டம் நேற்று மார்க்கம் நகரில் உள்ள மவுண்ட் ஜோய் ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவி திருமதி செல்வா அருள்ராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பல மூத்தோர்கள் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் டாக்டர் போல் ஜோசப். அறிஞர் சாமி அப்பாத்துரை மற்றும் 'உதயன்' லோகேந்திரலிங்கம் ஆகியோர் உட்பட மேலும் சிலர் உரையாற்றினார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தலைவி செல்வா அருள் தனது உரையில் நெருக்கடியான நேரத்தில் கூட தமது அமைப்பு தடையின்றி இயங்கிட உதவிகள் வழங்கிய அனைவருக்கும் குறிப்பாக **Seniors' Wellness Club** மூத்தோர் அமைப்பின் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு இவ்வாறான கொண்டாட்டங்களை நடத்துவதற்கு ஆதரவாக விளங்கும் அன்பர்களுக்கும் ஊடக நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.


**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் மாணவர் சக்தியின் எழுச்சி அளப்பரியது

## - சிவகுமாரன் நினைவேந்தலில் நிரோஷ்





தமிழ்த் தேசியத்தின் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக உறுதியுடன் போராடிய முதல் வித்து பொன் சிவகுமாரன். மாணவர் எழுச்சியாக உருப்பெற்ற பொன் சிவகுமாரனின் பயணம் தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய போராட்டப்பாதையில் அத்திபாரமாக அமைகின்றது. இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உரும்பிராயில் அமைந்துள்ள பொன் சிவகுமாரனின் நினைவிடத்தில் முன்னர் இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் மீள பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள பொன் சிவகுமாரனின் அஞ்சலி செலுத்திய பின் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிவகுமாரன் அவர்களது தியாகம் எமது விடுதலைப்போராட்டப் பாதையில் முக்கியமானது. தமிழ் மாணவர்களுக்கு அரசினால் இழைக்கப்பட்ட தரப்படுத்தல் அநீதி மற்றும் ஏயை ஒடுக்குமுறைகள் மற்றும் தேசத்துரோகங்களுக்கு எதிராக மாணவர் சக்தியாக துணிந்து போராடியவர்.

பொன் சிவகுமாரனின் தியாகம் என்பது தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றுதியுடனான போராட்டமாகும். அவருக்கான அஞ்சலி என்பது உறுதியான தமிழ்த் தேசிய பயணப்பாதையுடனேயே அமைய வேண்டும். சிவகுமாரனின் விடுதலைப் பயணத்தில் அவர் காட்டிக்கொடுப்புக்களுக்கும் தேசத் துரோகங்களுக்கும் எதிராகப் போராடியுள்ளார். மேலும் காலத்திற்குக் காலம் தமிழ் மாணவர்களின் எழுச்சி என்பது எமது போராட்டத்தில் திடகாத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளது.

சிவகுமாரன் அவர்கள் என்ன என்ன இலட்சியத்தினை கொண்டு தன் இன்னுயிரை ஆகுதியாக்கினாரோ அவரது இலட்சியத்திற்காகவும் அபிலாசைகளுக்காகவும் நாம் திடமாகப் பயணிக்கவேண்டியவர்களாகவுள்ளோம். எம் போன்றோருக்கு அவரது தியாகமும் இலட்சியமும் எப்போதும் சுவடாக அமைகின்றது.

தடைகள் இருந்த சமயத்திலும் பல்வேறு இடர்பாடுகளைத் தாண்டியும் நாம் இங்கே அஞ்சலி செலுத்தி வந்துள்ளோம். அண்ணன் சிவகுமாரன் அவர்களுடைய சிலைகள் கூட பல்வேறு தடவைகள் உடைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட உடைக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்துவைக்கப்பட்ட சிலை மண்ணுக்குள் புதையுண்டு காணப்பட்ட நிலையில் அதனை நான் தவிசாளராக பெறுப்பேற்ற உடன் மீள குறித்த வளாகத்திற்குள் பிரதிஸ்டை செய்திருந்தேன்.

அவ்வாறு பிரதிஸ்டை செய்யப்பட்ட இடத்திலேயே தற்போது அஞ்சலி செய்துள்ளேன். வரலாற்றை நாம் ஆவணப்படுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னால் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# வாதரவத்தை படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் வாதரவத்தையில் அனுஸ்டிப்பு!



இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை 33 ஆண்டுகளின் பின்னர் நினைவுகூறும் நிகழ்வு யாழ்ப்பாணம் புத்தூர் வாதரவத்தையில் திங்கட்கழமை (05-06-2023) மாலை இடம் பெற்றது.

1987 ஆம் ஆண்டு இதே நாளில் வாதரவத்தைப் பகுதியில் இந்திய அமைதிப்படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இறந்த பொது மக்களை நினைவு கூறுவதில் கடந்த காலங்களில் அச்சமான சூழல் நிலவிவந்ததன் காரணமாக இன்றைய தினம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இளையகுட்டி பரஞ்சோதியின் தலைமையில் இறந்தவர்களின் உடைக்கப்பட்ட நினைவு தூபிக்கு அருகில் நினைவு கூரப்பட்டது.



அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள் மனைவி மற்றும் உறவினர்கள் ஆகியோரால் பொதுச்சுடர் மற்றும் நினைவுச் சுடர் ஏற்றி கண்ணீர் மல்க மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட தேரம் பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள் மனைவி மற்றும் உறவினர்கள் ஆகியோரால் பொதுச்சுடர் மற்றும் நினைவுச் சுடர் ஏற்றி கண்ணீர் மல்க மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆனந்தி சசிதரன், இந்திய அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம் பல்வேறு இடங்களில் பொதுமக்களை படுகொலை செய்திருந்தது ஆனால் இவ்வாறான படுகொலைக்கு இன்றுவரையும் இந்திய அரசாங்கம் எவ்வித மன்னிப்பும் கோரவில்லை.

ஆனால் தமிழ் மக்களாகிய நாம் இன்றும் ஏதிலிகளாகவே இருந்து வருகிறோம் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களுகாக அமைக்கப்பட்டு யுத்தத்தின் போது உடைக்கப்பட்ட நினைவு தூவியை விரைவில் அமைத்து அவர்களை நினைவு கூறுவதற்கு வழி செய்ய வேண்டும் என்றும் இதன் போது கேட்டுக்கொண்டார்.

# மன்னார் மாவட்டத்தில் சவர்க்கார உற்பத்தி பயிற்சி பெற்ற 32 பேருக்கு தொடர் உற்பத்தியை மேற்கொள்வதற்கு அனுமதி பத்திரம் வழங்க நடவடிக்கை

- மன்னார் நிருபர் (06-06-2023)



மெசிடோ நிறுவனத்தினால் மன்னார் மாவட்டத்தில் சவர்க்கார உற்பத்தி பயிற்சியை பெற்றுக்கொண்டு தெரிவு செய்யப்பட்ட 32 பேருக்கு தொடர் உற்பத்தியை மேற்கொள்வதற்கு அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான பயிற்சி செவ்வாய்க்கிழமை (6) காலை மன்னார் மாவட்டச் செயலக ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்றது.



மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தொழில் அபிவிருத்தி சபையின் தலைமை காரியாலய அதிகாரி வருகை தந்து பயிற்சியினை வழங்கி வைத்தார்.

குறித்த பயிற்சியின் நிறைவில் அவர்களின் உற்பத்தி திறனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தொடர்ச்சியாக சவர்க்கார உற்பத்தியை மேற்கொள்ள அனுமதி பத்திரம் (லைசன்ஸ்) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பயிற்சியினை பெற்ற 32 பேருக்கும் தேசிய அபிவிருத்தி உற்பத்தி சபையினால் அவர்களுக்கான அனுமதி பத்திரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மன்னார் மாவட்டச் செயலகம் உள்ளடங்களாக அரச திணைக்களங்களில் வேலை பெற்றுத் தருவதாக கூறி பாரிய மோசடி

- மன்னார் நிருபர் (06-06-2023)

மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலகம் உள்ளடங்களாக அரச திணைக்களங்களில் வேலை பெற்றுத் தருவதாக கூறி அப்பாவி இளைஞர் யுவதிகளிடம் பெருந்தொகையான நிதிகள் பெறப்பட்டு மோசடி செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து மன்னார் மாவட்டச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (6) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் அரச வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி சில நபர்கள் இளைஞர் யுவதிகளிடம் பெரும் தொகை பணத்தை பெற்று மோசடி செய்துள்ளனர்.

குறிப்பாக மன்னார் மாவட்ட செயலகம் உள்ளடங்கலாக மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் வேலை பெற்று தருவதாக கூடி குறித்த குழுவினர் நிதி மோசடியில் ஈடுபட்டு வருவது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

திங்கட்கிழமை (5) கூட இவ்வாறு வேலை பெற்று தருவதாக பணத்தை பெற்றுக் கொண்டு திணைக்களத்தின் உயர் அதிகாரிகளோடு குறித்த மோசடிக்காரர்கள் கதைப்பது போல் தொலைபேசியூடாக கதை த்து பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மட்டுமின்றி பொருட்கள் தருவதாக பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களை கூறியும் நிதி மோசடியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

ஆகவே இது தொடர்பாக மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிரதேச செயலகங்கள் அரச திணைக்களங்களில் அரச பதவி பெறுவதற்கு எந்த ஒரு நிதியையும் பெற்றுக் கொண்டு அரசு பதவிகள் வழங்கப்படுவதில்லை.

அதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் இவ்வாறு பொருட்களும் கூட தனி நபர்களுக்கு வழங்குவதற்கு எந்த ஒரு நடைமுறைகளும் இல்லை அவ்வாறு செய்வது சட்டத்திற்கு முரண்பாடான ஒன்று ஆகும்.

இவ்வாறான நிதி மோசடிகளில் ஈடுபடுபவர்கள் உங்களை சந்திக்கும் போது உடனடியாக அவர்களுடைய அடையாள அட்டையை உங்களுடைய தொலைபேசியில் பதிவு செய்து கொள்வதோடு உங்கள் அருகில் உள்ள கிராம அலுவலர்கள் அல்லது போலீஸ் நிலையத்திற்கு தகவல்களை வழங்கும்படியும் கேட்டுக் கொள்வதோடு எவ்வாறு நிதி மோசடிகள் மன்னார் மாவட்டத்தில் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன் என தெரிவித்தார்.

# இலங்கை பொலிசாரின் அடக்குமுறை: கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காலை கொழும்பில் கைது; மாலை கிளிநொச்சியில் விடுதலை



**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

**கொ**ழும்பில் புதன்கிழமை (7) காலையில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாலையில் கிளிநொச்சி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக காலை அவரது வீட்டிற்கு சென்ற இலங்கை பொலிசார் கடுமையான வாக்குவாதங்களிற்கு பிறகு அவரை கைது செய்து, மருதங்கேணிக்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து தமக்கு அளிக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே அவரை கைது செய்வதாக பொலிசார் கூறினாலும், அதற்கான உத்தரவு எதையும் அவர்கள் காட்டவில்லை என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

பொலிசார் அவரை கைது செய்ய வந்துள்ள நிலையில், அவர் உடனடியாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை தொடர்பு கொண்டு விஷயத்தை தெரியப்படுத்தினார். அவர் சபாநாயகருடனான அவரது உரையாடலும், பொலிசாரிடம் கைது உத்தரவை காட்டுமாறு அவர் கோரியதையும் ஊடகங்களில் காண முடிந்தது.

மருதங்கேணிப் பகுதியில் பரீட்சை இணைப்புச் செயலகமாக இயங்கிய பாடசாலை வளாகத்தில் கூடி "பொலிசாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார்" என்ற குற்றச் சாட்டின் பெயரிலேயே கொழும்பில் வைத்து கொள்ளுப்பிட்டிப் பொலிசார் அவரை கைது செய்து மருதங்கேணிக்கு அழைத்து வந்தனர்.

இவ்வாறு மருதங்கேணிக்கு அழைத்து வரப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் வாக்குமூலம் பெறப்பட்டு அவர் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மருதங்கேணியில் உள்ள பாடசாலையின் மைதானத்தில் விளையாட்டுக் கழக உறுப்பினர்களைச் சந்துத்து உரையாடிய சமயம் அங்கு பிரசன்னமான சிவில் உடை தரித்த பொலிசார் நாடாளுமன்ற உறுப்பினரை தாக்க முற்பட்டதாக முன்னணி தரப்பிலும், தற்போது நாட்டில் இடம்பெறும் க.பொ.த சாதாரணப் பரீட்சையின் இணைப்புச் செயலக பாதுகாப்பிற்கு இருந்த பொலிசாரின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தியதாக பொலிசாரினாலும் குற்றம் சாட்டப்படுகின்றது.

இதேநேரம் இக்குற்றச் சாட்டில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள இருவரும் புதன்கிழமை கிளிநொச்சி நீநிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது.

பொலிசார் தனக்கு அறிவித்த பின்னரே பாராளுமன்ற உறுப்பினரை கைது செய்ததாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச "ஒரு பாராளுமன்ற உறுப்பினரை இவ்வாறு கைது செய்வதற்கு அனுமதிக்க முடியாது" என கூறிய போது "நாங்கள் பொலிசாரின் கடமைக்கு இடையூறு விளைவிக்க முடியாது" என சபாநாயகர் சபையில் பதிலளித்தார்.

அவரின் கைது நாடாளுமன்றத்தில் காரசாரமான விவாதங்களை ஏற்படுத்தியது. அவருடைய கொள்கைகளுடன் தாங்கள் மாறுபட்டாலும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவர் நாடாளுமன்றத்திற்கு வந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க முடியும் என்று சஜித் பிரேமதாச வாதிட்டார். இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் சிறீதரன், சுமந்திரன், சாணக்கியன் ஆகியோருடன் வேறு சில எதிரகட்சி உறுப்பினர்களும் பொலிசாரின் நடவடிக்கையை கண்டித்தனர்.

மருதங்கேணி சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று ஒரு சிறப்பு அறிக்கையை கஜேந்திரகுமார் தாக்கல் செய்யவிருந்தார். அதை தடுக்கும் நோக்கிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனினும், நாடாளுமன்ற உறுப்பினரின் கைது அவரது சிறப்புரிமையை மீறும் செயலாகும் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பிறகு, நாடாளுமன்ற விவாதங்களில் கலந்துகொள்ள அவர் அனுமதிக்கப்படுவார் என்று தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணம் மருதங்கேணி பகுதியில் பொலிசாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர்கள் புதன்கிழமை (7) பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் அனுமதித்தது. இந்த வழக்கின் அடுத்த விசாரணை ஜுலை மாதம் 14ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது தொடர்பான சமூக ஊடங்களில் பரவலாகப் பதியப்பட்டும் பகிரவும்பட்டுள்ளது. அவர் கைது செய்யப்பட்ட உடனேயே அது டிவிட்டரில் பதிவாகியது. உள்நாட்டிலும், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்பவர்களும் அந்தச் செய்தியை சுயமாகவும் மறுடிவீட்டும் செய்தனர்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தொழிலாளர் கட்சியின் மிட்சம் மற்றும் மோடன் தொகுதிக்கான உறுப்பினர் ஷியோபயின் மெக்டோனா அம்மையாரும் அவர் கைது செய்யப்பட்டதை கண்டித்துள்ளார். "கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைதானது, தமிழ் மக்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நீதிக்காகவும், பாரியளவிலான அட்டூழியங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவை குறித்தும், இன மோதலுக்கான அரசியல் தீர்வு குறித்து பேசும் போதும் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்" என்று டிவீட் செய்துள்ளார்.

அவரது கருத்து புலம்பெயர்ந்த நாடுகளில் பரந்தளவில் வாழும் தமிழ் மக்களால் வரவேற்கப்பட்டுள்ளது.

கனடிய செய்திகள் Canadian News

## Eligible travellers from 13 more countries now qualify for visa-free travel to Canada

# உலகின் மேலும் 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள், 6.6.2023 முதல் விசா இன்றி கனடாவுக்கு பயணம் செய்யலாம்

Immigration, Réfugiés et Citoyenneté Canada | Immigration, Refugees and Citizenship Canada

'Canada is a destination of choice for people looking to visit, do business or reunite with family and friends. That's why we are committed to improving our immigration programs and services by making them more efficient and equitable for people around the world.

The Honourable Sean Fraser, Minister of Immigration, Refugees and Citizenshipl, announced the addition of 13 countries to the electronic travel authorization (eTA) program. Travellers from these countries who have either held a Canadian visa in the last 10 years or who currently hold a valid United States non-immigrant visa can now apply for an eTA instead of a visa when travelling to Canada by air. Effective today, eligible travellers from these countries can benefit from the program:

- Antigua and Barbuda
- Argentina
- Costa Rica
- Uruguay
- Morocco
- Panama
- Philippines
- St. Kitts and Nevis
- St. Lucia
- St. Vincent and the Grenadines
- Seychelles
- Thailand
- Trinidad and Tobago

Introducing visa-free air travel will make it faster, easier, and more affordable for thousands of travellers to visit Canada for up to six months for either business or leisure. It will also help grow Canada's economy by facilitating more travel, tourism and international business, and by strengthening Canada's relationships with these countries while keeping Canadians safe. This decision will also divert thousands of applications from Canada's visa caseload, allowing us to process visa applications more efficiently, which will benefit all visa applicants. Individuals who already have a valid visa can continue to use it to travel to Canada. Those who are not eligible for an eTA, or who are travelling to Canada by means other than air (for example, by car, bus, train and boat—including by cruise ship), will still need a visitor visa. Travellers can visit Canada.ca/eTA to find out whether they're eligible for an eTA and how to apply for one.

---

உலகின் மேலும் 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள், 6.6.2023 முதல் விசா இன்றி கனடாவுக்கு பயணம் செய்யலாம். என கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் விவகாரங்கள். பிரஜாவுரிமைகள் துறை அமைச்சர் Sean Fraser வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கனடாவின் அமைச்சரான Sean Fraser, 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள், 6.6.2023 முதல், விசா இன்றி கனடாவுக்கு அதன்படி, 13 நாடுகளைச் சேர்ந்த கடவுச் சீட்டுக்கள் வைத்திருக்கும் பயணிகள், Temporary Residence Visa என்னும் தற்காலிக விசா இல்லாமலே கனடாவுக்கு பயணிக்கலாம்.

என்றாலும், இந்த சலுகை, அந்த 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள், கடந்த 10 ஆண்டுகளில் கனடா விசா வைத்திருந்தவர்களாகவோ அல்லது தற்போது செல்லத்தக்க United States non-immigrant visa என்னும் அமெரிக்க தற்காலிக விசாவோ வைத்திருப்பவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களுக்குப் பொருந்தும் என்றொரு நிபந்தனை உள்ளதை மறுப்பதற்கில்லை.

பின்வரும் நாட்டவர்களுக்கு இந்த சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதது.

- பிலிப்பைன்ஸ்
- மொராக்கோ
- பனாமா
- ஆன்டிகுவா மற்றும் பார்புடா
- செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ்
- செயிண்ட் லூசியா
- செயிண்ட் வின்சண்ட் மற்றும் கிரனடைன்ஸ்
- ட்ரினிடாட் மற்றும் டொபாகோ
- அர்ஜெண்டினா
- கோஸ்டா ரிக்கா
- உருகுவே
- செஷல்ஸ்
- தாய்லாந்து

இது தொடர்பாக கனடிய குடிவரவுத்துறை அமைச்சை சேர்ந்த அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் ஏற்கனவே 50க்கும் மேற்பட்ட நாட்டவர்களுக்கு விசா இல்லாமல் கனடாவுக்கு பயணிக்கும் சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்களில் பெரும்பாலானோருக்கு விமானம் மூலம் கனடா வருவதற்கு, மின்னணு பயண அங்கீகாரம் Electronic Travel Authorization (eTA) தேவை என்பது குறிப்பிடத்தக்கது.



# தையிட்டி, மருதங்கேணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

மருதங்கேணிச் சம்பவமானது ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் உள்ள மதிப்பு எவ்வளவு என்பதை உணர்த்துகின்றது. இக்கட்டுரை எழுதப்படுகையில் கஜேந்திரகுமார் உட்பட அவருடைய கட்சியை சேர்ந்த மூன்று பேர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல்துறை தன் கடமையைச் செய்வதற்கு இடையூறு விளைவித்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு இருக்கிறது.

அச்சம்பவமும் அதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த கைது நடவடிக்கைகளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவுத் தளத்தை ஒப்பீட்டளவில் பலப்படுத்தியிருக்கின்றன. எனினும், அக்கட்சியின் அரசியல் எதிரிகளும், அக்கட்சியின் தூய்மைவாத நடவடிக்கைகளால் எரிச்சல் அடைந்தவர்களும், மருதங்கேணிச் சம்பவத்தை ஒரு நாடகம் என்று வர்ணிக்கின்றார்கள்.

மற்றொரு தரப்பினர் இது தொடர்பில் ஒரு சூழ்ச்சி கோட்பாட்டை முன்வைக்கிறார்கள். இந்தியாவைக் கடுமையாக விமர்சிக்கும் ஒரு கட்சியை மேலும் பலப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியிலேயே இந்திய எதிர்ப்பை பலப்படுத்தும் உள்நோக்கம் அரசாங்கத்திடம் உண்டு என்றும் அவர்கள் சந்தேகிக்கின்றார்கள். தனது தூய்மைவாதத்தின் மூலம் தமிழ் கட்சிகளுக்கு இடையே ஐக்கியம் ஏற்படுவதைத் தடுக்கும் ஒரு கட்சியை பலப்படுத்துவதன்மூலம் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதைத் தடுக்கும் நோக்கத்தோடு அரசாங்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர்கள் சந்தேகிக்கின்றார்கள்.

அதேசமயம் இக்காலப் பகுதியில் ஒரு பேப்பர் கட்டிங் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்படுகிறது. அது விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட காலகட்டம் ஒன்றில் அது தொடர்பாக டெலோ இயக்கமும் குமார் பொன்னம்பலமும் தெரிவித்த கருத்துக்களைக் கொண்ட ஒரு செய்திக் குறிப்பாகும். குமார் பொன்னம்பலம் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டமையை ஆதரித்து கருத்து தெரிவித்திருக்கிறார்.

மருதங்கேணிச் சம்பவத்தை ஒரு நாடகம் என்று வர்ணிக்கும் முன்னணியின் அரசியல் எதிரிகள் மேற்படி பேப்பர் கட்டிங்கைப் பரவலாகப் பகிர்ந்து வருகிறார்கள். மருதங்கேணியில் முன்னணி வேண்டுமென்று முரண்பாடுகளை தூண்டிவிட்டது என்று விமர்சிக்கும் தரப்புகள் குமார் பொன்னம்பலத்தின் விசுவாசத்தை கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத்தோடு மேற்படி பேப்பர் கட்டிங்கைப் பகிர்ந்து வருகிறார்கள்.

கடந்த 14 ஆண்டு கால தமிழ் அரசியலில் விகாரமாக மேலெழுந்து வரும் ஒரு போக்கு இது. தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சூழ்ச்சிக் கோட்பாடுகளை உருவாக்குவது. முன்பு மொட்டைக்கடிதம் இருந்தது. இப்பொழுது புனை பெயரில் முகநூல் கணக்கு உள்ளது. தமக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி கருத்து கூறும் சுதந்திரத்தையும் துணிச்சலையும் சமூக வலைத்தளங்கள் அதிகப்படுத்தியுள்ளன. அதனால் யானை பார்த்த குருடர்கள் எல்லாம் விமர்சகர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து சமூக வலைத்தளங்களில் தமது அரசியல் எதிரிகளின் மீது கீழ்த்தரமான தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட பேப்பர் கட்டிங்கை பரவலாக்குவதும் அதே சீரழிந்த விமர்சனப் பண்பாட்டின் ஒரு வெளிப்பாடுதான்.

ஆனால் அந்த விமர்சனப் பண்பாட்டை வளர்த்தெடுத்ததில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஒரு பெரிய பங்கு உண்டு. தமது அரசியல் எதிரிகளை இனத்துரோகிகளாக சித்தரிப்பதன்மூலம் அவர்களின் ஆளுமையை சிதைக்கும் ஒரு அரசியல் விமர்சனப் பண்பாட்டை அக்கட்சிதான் அதிகமதிகம் முன்னெடுத்தது. தமிழ் அரசியலில் விமர்சனத்தை அவதூறாக மாற்றியதில் அக்கட்சிக்குப் பெரிய பங்குண்டு. இப்பொழுது அவர்கள் மீதும் அதே விதமாக சூழ்ச்சிக் கோட்பாடு முன்வைக்கப்படுகிறது.

குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட அந்த பேப்பர் கட்டிங்கில் இருப்பது உண்மையா பொய்யா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சில-வேளை, அச்செய்தி உண்மையாக இருந்தாலும், அதை மட்டும் வைத்து குமார் பொன்னம்பலத்தை மதிப்பிட முடியாது. அவருடைய வாழ்க்கையை முழுமையாகத் தொகுத்துப் பார்க்க வேண்டும். அந்த பேப்பர் கட்டிங்கில் காணப்படும் செய்தி உண்மையாக இருந்தால் அது அவருடைய ஒரு காலகட்ட அரசியல் நிலைப்பாடு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் பிறகு ஒரு காலம் அவருடைய வேறொரு அரசியல் நிலைப்பாட்டுக்காகவே அவர் கொல்லப்பட்டார். அந்த நேரத்தில் அவர் தனது கொழும்பு மைய வாழ்க்கையை, தன்னுடைய சொத்துக்களை பாதுகாக்கும் ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்திருந்திருந்தால் அவர் தன் உயிரை பாதுகாத்து இருந்திருக்கலாம்.

தமிழ் அரசியலில் சட்டச் செயற்பாட்டாளர்கள் என்று பார்க்கும் பொழுது, குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் ஒரு சதம் கூட வாங்காமல் வழக்காடியவர் என்று பார்க்கும் பொழுது, குமார் பொன்னம்பலத்தின் வாழ்வு பெரியது. மனிதர்களை அவர்களுடைய தொகுக்கப்பட்ட வாழ்க்கைக்குள்ளால்தான் நிறுக்கலாம். ஒரு மனிதருடைய ஒரு காலகட்ட நிலைப்பாட்டை மட்டும் வைத்து அவரை நிறுக்க முடியாது. எதிலும் ஒரு தொகுக்கப்பட்ட முழுமையான பார்வை அவசியம். தமிழ் அரசியலில் ஒருவர் தனது துறை சார்ந்து அதிகமாக தொண்டு செய்தாரா அல்லது தொழில் செய்தாரா என்று பார்க்க வேண்டும். இது குமார் பொன்னம்பலத்துக்கும் பொருந்தும். முன்னணியால் கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் விமர்சிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

மருதங்கேணிச் சம்பவத்தின் பின்னணியில் அக்கட்சியை விமர்சிக்கும் பலரும் முன்னணி வேண்டுமென்றே முரண்பாட்டை தோற்றுவிக்கிறது என்றே விமர்சித்து வருகிறார்கள். ஆனால் முன்னணி முரண்பாட்டை தோற்றுவித்ததா இல்லையா என்பதல்ல இங்கு பிரச்சனை. அது ஒரு முரண்பாடாக வளரக்கூடிய அரசியல் சூழல் இப்பொழுதும் உண்டு என்பதுதான் இங்கு பிரச்சனை. தமிழ் கட்சிகளின் நிகழ்வுகளிலும் ஏனைய பொது நிகழ்வுகளிலும் அரச புலனாய்வுத் துறையின் பிரசன்னம் எனப்படுவது கடந்த 14 ஆண்டு கால யதார்த்தம். குறிப்பிட்ட ஒரு அரசியல் நிகழ்வை குறிப்பாக தீவிர நிலைப்பாட்டை கொண்ட ஒரு கட்சியின் அசைவுகளை கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் புலனாய்வுத்துறை அக்கட்சியின் நடவடிக்கைகளைப் பின் தொடர்வது வழமை.

போர்க்காலங்களில் அது அச்சுறுத்தலான ஒரு நடவடிக்கையாக இருக்கும். ஆயுத மோதல்கள் இல்லாத காலங்களில் அது நாகரிகமான வழிமுறையாக இருக்கும். இது தமிழ் அரசியல் செயற்பாட்டுக் களத்துக்கு மட்டும் உரிய ஒரு யதார்த்தம் அல்ல. தென்னிலங்கையில் தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின்னணியில் அங்கேயும் அதுதான் யதார்த்தம். ஆனால் இன முரண்பாடுகள் எரிபற்று நிலையில் காணப்படும் ஓர் அரசியல் களத்தில் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள் அச்சுறுத்தலாகவே பார்க்கப்படும்.

கடந்த 14 ஆண்டு காலமாக அதை ஒரு விவகாரமாக மாற்றி அதற்கு எதிராக போராடக் கூடிய ஒரு நிலைமை தமிழ் பரப்பில் குறைவாகவே காணப்பட்டது. மருதங்கேணிச் சம்பவத்திலும்கூட ஒரு புலனாய்வாளர் கஜேந்திரக்குமாரை தட்டிவிட்டுத் தப்பிச் செல்கிறார். அவரை கஜேந்திரக்குமாரின் கட்சிக்காரர் மட்டுமே துரத்திச் செல்கிறார். அங்கே சந்திப்புக்கு வந்திருந்த பொதுமக்களில் யாரும் துரத்தி செல்லவில்லை. ஏனென்றால் அப்படித் துரத்தி செல்வதற்கான துணிச்சல் அங்கிருந்த பலருக்கும் இருக்கவில்லை.

இது ஒரு தமிழ் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை உடைத்துக் கொண்டு முன்னணி போராடுகிறது என்பது உண்மை. அதனால்தான் கட்சியின் தலைவருமுட்பட மூவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தமிழ் அரசியலில் காணப்படும் அச்சுறுத்தலான ஒரு சூழலைக் காட்டுகின்றது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அவருக்குள்ள சிறப்புரிமைகளின் பிரகாரம் அதிலிருந்து தப்ப முடியும். ஆனால் ஏனைய கட்சித் தொண்டர்களின் நிலை எப்படி அமையும்?

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்திலும் உயர் பாதுகாப்பு வலையத்துள் அமைந்திருக்கும் அந்த காணிக்குள் கஜேந்திரன் மட்டும் தனி மனிதனாக இருந்து போராடினார். அவரைச் சூழ்ந்து மிகக் குறைந்த ஆதரவாளர்களே காணப்பட்டார்கள். அந்த விகாரைக்கு எதிரான போராட்டத்தில் பங்குபற்றிய மக்களின் தொகையை வைத்துக் கணக்கிட்டால் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிரான போராட்டத்துக்கு தமிழ் மக்களின் ஆதரவு குறைவாக இருக்கிறது என்று ஒரு முடிவுக்கு அரசாங்கம் வரக்கூடுமா என்று ஒரு செயற்பாட்டாளர் கேட்டார்.

தமிழ் மக்கள் இது போன்ற விடயங்களில் அரச படைகளை அல்லது காவல்துறையை அல்லது புலனாய்வுத் துறையை எதிர்த்துப் போராடுவதற்கு இப்பொழுதும் தயங்குகிறார்கள். இந்த விடயத்தில் பயத்தை உடைத்துக் கொண்டு போராட்டங்களை முன்னெடுப்பதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு முன்மாதிரியை காட்டுகிறது. எனவே தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப் பிராந்திக்குள் வைத்திருப்பதற்கே மேற்கண்ட கைது நடவடிக்கைகள்.

அரசாங்கம் கஜேந்திரக்குமாரில் கைவைத்ததன் மூலம் சிங்கள பௌத்த உணர்வுகளைத் திருப்திப்படுத்த முடியும். இது அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்த ரணிலுக்கு உதவும். மேலும் ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களின் கோபத்தைத் திசைதிருப்பவும் உதவும்.

## ஆங்கில ஆசான்
## (நிலை மண்டில ஆசிரியப்பா)

நாகேந்திரனென்ற நல்லதோர் ஆசான்
வாகாக வந்த தெமக்கு வரமே!
ஆங்கிலக் கல்வியை அழகாய்க் கற்கவே!
பாங்காய்ப் பாடப் பதிப்புத் தந்தே!
தாங்காக் குளிரிலும் தயங்கி நிற்காது
ஓங்கார மந்திர மாக ஓதுவார்
புத்தரைப் போலவே புனிதராய் வந்தே!
புத்து ணர்வுடன் புதன்கிழ மைகளில்
முத்தாய்ப் பாடம் நடாத்தும் முதல்வனை
சொத்தாய் எண்ணி தொழுது நிற்போம்
கனடாக் கதையும் கண்டத் தோற்றமும்
மனதில் வைத்தே மறந்திடாச் சொல்வார்
இலக்கண விதிகளை இதமாய்ச் சொல்லியே!
கலங்கிடா நாங்கள் கற்றிடச் செய்வார்
அன்னார் ஞாபக அறிவைக் கண்டு
என்னுள் எண்ணி ஏக்கம் கொள்வேன்
கதையுடன் கல்வியைக் கருத்துடன் இயம்பியே
சிதைவிலா அவற்றைச் சிந்தையில் ஏற்றுவார்
மூத்தோர் எமக்கு மூச்சாய் வழங்கும்
ஆத்மாவை ஆயுள் உளவரை மறக்கோம்
தன்னார்வத் தொண்டாய்த் தன்பணி செய்யும்
அன்னவர் ஆற்றலைப் போற்றி வாழ்த்துமே!

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453



# பௌத்த மேலாதிக்கத்திற்கு நிதி அளித்து 'வலுவூட்டும்' வெளிச் சக்தி எது?

வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

• தமிழ்த் தலைமைகளே" மண்ணும் மக்களும் வேண்டாமா?
• தமிழ் மக்களை எங்கு அழைத்துச் செல்ல முற்படுகின்றீர்கள்?
• இலங்கை மக்களை ஓரணியில் அணி திரட்டலாம்!

நாடு கடன் சுமைக்குள் மூழ்கிக் கிடக்கின்றது. கடன் வழங்கிய நாடுகளிடம் கால அவகாசம் கேட்டு சாஷ்டாங்கமாக இலங்கை விழுந்து கிடக்கின்றது. குடிமக்கள் உணவுப் பற்றாக் குறையாலும் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்த இயலாமலும் நாளாந்தம் போராடிக் கொண்டிருக்கின்றனர். மீட்பர் எவருமின்றி ஒட்டு மொத்த நாடும் குறிப்பாக தென்னிலங்கை தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

பெரும்பான்மையான மக்களுக்கு தேர்தல் மற்றும் அரசியல் அமைப்பு மீது நம்பிக்கை இல்லை - என்று இன்றைய அரசாங்கத்தின் இரு பெரும் தூண்களான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டு மக்களுக்கு நாட்டை சீர் தூக்கிப் பார்க்கும் உண்மை விளம்பிகளாக ஆரூடம் கூறுகின்றனர்.

நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற "2023/2024 தேசிய சட்ட மாநாட்டில்" உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

"வருந்தத்தக்க வகையில், நமது பெரும்பான்மையான மக்கள் தேர்தல் மற்றும் அரசியலில் நம்பிக்கை இழந்துவிட்டனர். அது பாராளுமன்றம், நீதித்துறை, ஊடகங்கள், தனியார் துறை தொழிற்சங்கங்கள் அல்லது தொழில் வல்லுநர்கள் என எதுவாக இருந்தாலும், ஏராளமான குடிமக்கள் நம்மை நிர்வகிக்கும் முழு அமைப்பின் மீதும் நம்பிக்கை இல்லை" என்று ஜனாதிபதி கூறினார்.

• தேர்தலை நடத்தினால் மக்களின் நம்பிக்கை தெரியும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதியும் இன்றைய அரசாங்கத்தில் பிரதம மந்திரியாக இருந்து விலகியவருமான மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கூற்றுப்படி மக்கள் தேர்தலில் நம்பிக்கை இழந்தார்களா என்பதற்கு தேர்தலை நடத்தினால் தெரியவரும். ஏனெனில் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கு ரணில் - ராஜபக்ஷ இன்றைய கூட்டரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். இதற்கும் அப்பால் மக்கள் நம்பிக்கை இழப்பதற்கான பொறுப்பையும் சுதந்திர இலங்கையில் ஆட்சி பீடமேறியவர்களும் குறிப்பாக இன்றைய ரணில் - ராஜபக்ஷ ஆட்சியாளர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

• நீதி கோரி தமிழர் வழியில் தென்னிலங்கை!

இலங்கையின் அனைத்து அரச கட்டமைப்பிலும் அரசியல்வாதிகளிலும் நம்பிக்கை இழந்த நிலையில் நிற்கும் ஒட்டு மொத்த தென்னிலங்கையும் தமிழ் மக்களின் வழியில் சர்வதேசத்திடம் நீதி கோரி நிற்கின்றது. மறுபுறம் சுதந்திர இலங்கையின் தோற்றுப் போன நாட்டை மீட்டெடுக்க தென்னிலங்கை சர்வதேசத்திடம் கையேந்தி நிற்கின்றது.

• இலங்கை மக்களை ஓரணியில் அணி திரட்டலாம்!

இலங்கை மக்களை ஓரணியில் அணி திரட்டுவதற்கான அனைத்து ஏது நிலைகளையும் கொண்டுள்ளது என்பது இலங்கையின் இன்றைய யதார்த்தமாகும் இன்றைய இந்த நிலையைப் பயன்படுத்தி தென்னிலங்கை வடக்குக் கிழக்கு மலையகம் முஸ்லிம் மக்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்கும் முயற்சிக்கு எந்தத் தரப்பும் தயாராக இல்லை அல்லது அதற்கான சரியான திட்டத்தையும் தலைமையையும் வழங்கும் நிலையில் எவரும் இல்லை என்பதே உண்மையாகும்.

• ஆரசியல் கட்சிகளுக்கு அக்கறை இல்லை.

இது குறித்து களத்தில் நிற்கும் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. அது ஜே.பி.யாக வோ அல்லது சஜித் அணியினராகவோ அல்லது மொட்டுக்குள் இருந்து பிரிந்த அணியினராகவோ இருக்கலாம். இவர்கள் எவருக்கும் இந்த விடயத்தில் அக்கறை இல்லை.

• 75வருட கால அரசியலின் பிள்ளைகள்.

தேர்தலில் பெரும்பான்மை இன வாக்குகளைக் குறி வைத்துக் காத்திருக்கும் இந்தக் கொக்குகளுக்கு இலங்கையின் பல்லின பல மொழி பல கலாசார பண்புகளுடனான அரசியல் கலாசாரத்தில் ஆர்வம் இல்லாமல் இருப்பது குறித்துஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் இவர்களும் சுதந்திர இலங்கையின் 75வருட கால அரசியலின் பிள்ளைகளாகப் பிறப்பெடுத்தவர்கள் என்ற வகையில் இத்தகைய அரசியல் நகர்வை இவர்களிடம் இருந்து எதிர்பார்க்க முடியாததுதான்.

எனவேதான் சுற்றிச் சுழன்று அதே 75வருடகால குண்டுச் சட்டி அரசியலுக்குள் குதிரை ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

• 2048 வரை உயிர் வாழ்ந்துவிட முடியுமா?

மொத்தத்தில் இலங்கையின் ஒட்டு மொத்த மக்களும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார மீட்சி குறித்த ஆரூடத்திற்கு மத்தியில் 2048 வரை உயிர் வாழ்ந்துவிட முடியுமா என்பது கேள்விக்குறியே.

ஆனால் இந்த பொருளாதார நெருக்கடியின் கூட்டு அவலத்தை நாடு சிறிது நேரத்தில் மறந்துவிடும் அளவுக்கு ரணில் - ராஜபக்ஷ ஆளும் தரப்பு அரசியல் காய்களை நகர்த்தி விட்டது.

தணிக்கை செய்யப்பட வேண்டிய வகையிலான வெறுப்புணர்வைக் கக்கிய முகமது சஹ்ரானுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் இருந்து வெகு காலத்திற்கு முன் பின்வாங்கிய சட்ட அமலாக்க முகவர்களும் அரசியல் தலைவர்களும்இ தற்போது களத்தில் இறங்கியுள்ளனர் என தென்னிலங்கை ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

• ஜெரோம் பெர்னாண்டோ , நடாஷா விவகாரம்.

ஜெரோம் பெர்னாண்டோ, "மிராக்கிள் டோம்" என்ற செல்வந்த தேவாலயத்தின் மத பிரசங்கத்தில் அவர் கூறிய கருத்துக்காக கைது செய்யப்படுவதை எதிர்கொள்கிறார்.

நடாஷா எதிரிசூரியா முட்டாள்களின் பிரைட் (மோடபிமானயா) நகைச்சுவை நிகழ்ச்சியில் தனது நடிப்பின் மூலம் மத ஒற்றுமையை தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

• பொது மக்களின் எச்சரிக்கை.

குடிமக்கள் உணவு மற்றும் நல்ல வாழ்க்கையின் பற்றாக்குறையால் அவதிப்படும்போது அவர்களின் கவனத்தை ஜெரோமி மற்றும் நடாஷாவிடம் திருப்புவது மக்கள் தமது பசியை மறந்து அன்றாடம் அவர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சனைகளில் இருந்து திசை திருப்புவதற்கான உபாயமாகவே மேற் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான வழியில்இலங்கை அதிகாரிகள் ஒரு சிலரின் மதவாதத்தை ஊர்ஜிதம் செய்யக்கூடாது. அத்தகைய சூழ்ச்சிகள் நாட்டைக் கொண்டு செல்லும் இலக்கு மிகவும் பரிதாபகரமானதாக இருக்கும் மற்றும் வாழத் தகுதியற்றதாக இருக்கும் என்றும் பொது மக்கள் எச்சரிக்கின்றனர்.

தென்னிலங்கையில் பொது மக்களின் எச்சரிக்கை அரசாங்கத்தை நோக்கி வெளிவரும் அதேவேளையில் இனவிவகாரத்துக்கான தீர்வு குறித்து பேசி வரும் ஜனாதிபதி ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் வடக்குக் கிழக்கில் தலைவிரித்தாடும் பௌத்த மேலாதிக்கத்தின் செயற்பாடுகள் குறித்து மௌனம் சாதிப்பது ஏன் என்ற கேள்வி எழும்புகின்றது. இந்த நகர்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளை கொதி நிலையில் வைத்திருப்பதே இலக்காக இருக்கின்றது.

அதே வேளையில் ஒட்டு மொத்த நாடும் வங்குரோத்து நிலையில் உள்ளது. கடன் சுமையில் இருந்து விடுபடும் மார்க்கம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியவில்லை. அனால் இத்தகைய பொருளாதார நெருக்கடிகளையும் மேவிய நிலையில் பௌத்த மேலாதிக்க கரங்கள் தமிழர்களின் தாயகப் பகுதிகளை விழுங்கிவிட முனைப்புடன் செயற்படுகின்றது. இவை நாட்டின் நல்லிணக்கத்திற்கு பேருதவி புரியவையா? என தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதனைத் தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி தமிழ்த் தலைமைகளிடம் உள்ளதா?

கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து தமிழர் தாயகத்தின் மீதான பௌத்த மேலாதிக்கம் காணி அபகரிப்பு சிங்களக் குடியேற்றம் என்பன துரித கதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. அனால் அந்த நிகழ்ச்சி நிரல் வீரியம் பெறுவதற்குள்ளேயே அரகலய அவரை வெளியேற்றி விட்டது.

அதற்காக பௌத்த மேலலாதிக்க செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன என்று அர்த்தமல்ல. ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதைத் தொடர்ந்து அது மீண்டும் வீரியம் பெற்றது. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தபோதும் பௌத்த மேலாதிக்கத்தின் அனைத்து நிகழ்ச்சிநிரல்களும் மிக வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. பொருளாதார நெருக்கடிகளையும் மீறி பௌத்த மேலாதிக்க நிகழ்ச்சி நிரல்களுக்கு பணம் கொட்டுவதுதான் ஆச்சரியமாக இருக்கின்றது.

தொல்பொருள் திணைக்களத்திற்கு கிடைக்கும் நிதி பற்றி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பிய போது பௌத்த துறவிகள் நிதி அளிப்பதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

பௌத்த துறவிகளுக்கு எங்கிருந்து பெருந் தொகையான நிதி கிடைக்கின்றது? இந்த நிகழ்ச்சி நிரலின் பின்னால் நிற்கும் நாடு எது என்பது குறித்து தமிழர் தரப்பு ஆராய்ந்து பார்த்து வெளிக் கொண்டு வர வேண்டிய நேரம் வந்துவிட்டது. உண்மையில் இந்த மறைந்த கரம் குறித்து ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்களும் தேடிப் பார்க்க வேண்டிய விடயமாகும்.

தமிழ்த் தலைமைகளைப் பொருத்து இன விவகாரத் தீர்வு குறித்து எந்த விதமான திட்டவட்டமான தீர்வும் இன்றி காலத்துக்குக் காலம் பேச்சிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். தமிழர் தாயகத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தியோ அல்லது இலங்கை அரசாங்கம் பெரும் எடுப்பில் மேற் கொள்கின்ற காணி கபளீகாரரம் குடியேற்றம் என்பனவற்றையும் தடுத்து நிறுத்தும் வகையிலான வேலைத் திட்டங்கள் ஏதும் இன்றி இருப்பதுடன் இவை அனைத்தையும் தமிழ் ஊடகங்களில் பரபரப்புக்கான செய்திகளாக்கி குளிர் காயும் அரசியலே மேற் கொள்ளப்படுகின்றது.

• தமிழ் மக்களின் கேள்வி?

இதே பாணியில் தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களை எங்கு அழைத்துச் செல்ல முற்படுகின்றனர் என்பதுதான் தமிழ் மக்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து எழும்பும் கேள்வியாகும்.

இத்தகைய வெற்று வேட்டு அரசியல் தொடருமாயின் இன்று இணக்க அரசியலில் வெளிப்படையாக ஈடுபடும் "தமிழ்த் தலைமைகளும்" மறைமுக இணக்க அரசியலில் ஈடுபடும் "தமிழ்த் தலைமைகளும்" சாதிக்க நினைப்பது என்ன? என்ற கேள்விகளுக்கப்பால் இந்த இரு பகுதியினருமே அரசியல் நடத்துவதற்கு மண் இருக்காது. தமிழ் மக்களுடன் கலந்து விட்ட சிங்கள மக்களும் சிதறடிக்கப்பட்ட தாயகத்தில் நீங்கள் நடத்துவதற்கு அரசியலும் இருக்காது.

ஏனெனில் மக்களும் மண்ணும் பேரினவாத அலைக்குள் மூழ்கிக் கிடக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

எனவே "தமிழ்த் தலைமைகளே" எதிர் காலத்தில் யாருக்காக அரசியல் நடத்துவீர்கள்?;. எவ்வாறு நாடாளு மன்றத்தை, மாகாண சபைகளைக் கட்டி ஆளப் போகின்றீர்கள்.

Email : vathevaraj@gmail.com
6th June 2023



# தமிழ் சிவில் சமூக அமையம்
# TAMIL CIVIL SOCIETY FORUM



08.06.2023

## கௌரவ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் மேலான பழிவாங்கல்கள் தமிழினம் மீதான தொடரும் இனவழிப்பின் ஒரு அங்கமே

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் சிறீலங்கா பாராளுமன்றிற்கான யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதியுமான கௌரவ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களதும் அவரது கட்சிச் செயற்பாட்டாளர்களினதும் கைதுகள் மற்றும் அதனோடிணைந்த நிகழ்வுகள் இனரீதியான பழிவாங்கல் நிகழ்வுகளின் ஒரு அங்கமே என தமிழ் சிவில் சமூக அமையம் நிச்சயமாகக் கருதுகின்றது. இவ்வாறான நிகழ்வுகள் இனரீதியான ஒதுக்கல், பழிவாங்குதல் நிகழ்வுகள், அழிப்புகள் என பல்வேறு வகைகளில் கடந்த 75 வருடங்களாக இனவழிப்புக்குள்ளாகி வருகின்ற தமிழினத்துக்கு புதியதல்ல. எமது கண்டனங்கள் எவையும் இந்த நிலையை மாற்றப் போவதும் இல்லை. ஆனாலும் இந்தக் கைதுகளை தமிழ் சிவில் சமூக அமையம் வன்மையாகக் கண்டிப்பதுடன் பாதிக்கப்படடுள்ளவர்களுக்கு தமது தார்மிக ஆதரவையும் தெரிவிக்க விரும்புகின்றது.

சாதாரணமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்ற யதார்த்தம் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதிநிதித்துவ அரசியலின் போதாமையினைத் தமிழ் மக்களுக்கு ஞாபகமூட்டுவதாக அமைகின்றது.

தொடர்ந்தேர்ச்சியாக தமிழர் பிரதேசம் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளமையைக் கேள்விக்குட்படுத்தி வரும் கௌரவ பொன்னம்பலத்தைக் கைது செய்தமையை தமிழ் சிவில் சமூகத்தினருக்கும் ஏனைய தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவுமே பார்க்க வேண்டியுள்ளது. இது தொடர்பிலும் தெற்கின் குறிப்பாக கொழும்பின் சிவில் சமூகம் பெரும்பாலும் வாய் மூடி மௌனிகளாக இருப்பது ஆச்சரியத்தைத் தராவிட்டாலும் தொடர்ந்து ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து இன்னும் மீளாத இந்தச் சந்தர்ப்பத்திற்கூட சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆட்சி இயந்திரமான சிறீலங்கா அரசு தமிழினத்தின் உரிமைகளை நசுக்குவதை இறுதி வரை கைவிடாது என்பதை இந்தக் கைதுகளும் அதனோடு தொடர்புபட்டதான அண்மைய நாள்களின் நிகழ்வுகளும் மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களுக்கு நினைவூட்டுகின்றன.

சிங்கள பௌத்த பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய பிரதிநிதியாயிருப்பினும் கூட தமிழராயின் அவருக்கு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் அரசு எந்திரமான பொலிசாரால் மட்டுமல்ல பாராளுமன்றத்தாலும் கூட வழங்கப்பட மாட்டாது என்பதை நெற்றிப்பொட்டிலடித்தது போல இச்சம்பவங்கள் ஊடாக தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற எ உறுப்பினராயினும் தமிழராயின் அவருக்கு தனது சொந்த மக்களை சந்திப்பதற்கு உரிய உரிமையுமற்ற நிலையே இத்தீவில் நிலவுவதும் அதுவும் விளையாட்டு உபகரணங்களை தான் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு வழங்குவதற்கான ஒரு சாதாரண கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துவதாயின் கூட ஒற்றர்களும் உளவாளிகளும் உருமறைப்பில் வருவர் பதிவுகளை மேற்கொள்வர் அதன் வழி கலந்து கொண்டவர்களை அச்சுறுத்துவர், பழிவாங்குவர் என்ற தீவிர நிலையில்தான் தமிழர்களின் தாயகமுள்ளதுவும் அப்பட்டமாக இந்த நிகழ்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தமிழர் தாயகம் எந்த அளவுக்கு உளவுப்படைகளின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது என்பதும் தமிழ் மக்களின் உரிமைக்கு விட்டுக் கொடாது குரல் கொடுப்பவர்கள் மீது சிறீலங்கா அரசின் படையக் கட்டுமானங்களும் சட்டங்களும் எவ்வாறு கொடூரமாகப்பாயும் என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ்த் தேசத்தின் உரிமைக்காக குரல் கொடுப்பவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள பேரினவாத அமைப்புகளைப் போல எவ்வாறெல்லாம் வெறுப்பையும் எதிர்ப்பையும் வெளிக்காட்டுவர் என்பதையும் இந்த நாள்களின் நிகழ்வுகள் தமிழ் மக்களுக்கு மீள ஒரு முறை நிகழ்த்திக் காட்டுவனவாக உள்ளன.

சிறீலங்கா அரசின் 75 வருட நீதியற்ற காட்டாட்சியின் கீழ் தமிழ் மக்கள் எவ்வாறான இடத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள், எதனால் அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டார்கள், எதனால் அவர்கள் தமக்கான நீதியை தீவிற்கு வெளியில் தேடுகின்றார்கள், தமக்கு 75 ஆண்டுகளாக இழைக்கப்பட்டுவரும் அநீதிகள் கொடூரங்கள் படுகொலைகளடங்கிய இனவழிப்புக்கு எதிராக எதற்காக சரவதேச விசாரணையைக் கோருகின்றார்கள் என்பவற்றுக்கான விளக்கமாக இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளன.

சர்வதேச சமூகமும் தற்போதைய நிலைக்குக் கூட்டுப் பொறுப்பாளிகள் என்பதனை ஞாபகப்படுத்துகின்றோம். இலங்கை அரசு தொடர்பில் அவர்கள் கடைபிடிக்கும் மென் போக்கு தமது சொந்த தேசிய, புவிசார் நலன்களின் பாற்பட்டது மட்டுமே என்பதனை நாம் அறிவோம். அதற்கு அப்பால் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மானிட மாண்புகளைப் பேணல் என்பதெல்லாம் மேம்போக்கான பூசி மெழுகுதல்கள் மட்டுமே என்பதனையும் நாம் அறிவோம். எனவே தமிழ் மக்கள் தொடர்பிலோ, அவர்களது மனித உரிமைகள் தொடர்பிலோ தமக்கு அக்கறை இருப்பது போல் தழிழ் மக்களுக்கு போலி நம்பிக்கைகளை மட்டும் தருவதை தொடராது இனியாவது உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நாம் சர்வதேச சமூகத்தை வினயத்துடன் வேண்டுகின்றோம்.

(ஒப்பம்)
அருட்பணி வீ. யோகேஸ்வரன்
இணைப் பேச்சாளர்
தமிழ் சிவில் சமூக அமையம்

(ஒப்பம்)
பொ. ந. சிங்கம்
இணைப் பேச்சாளர்
தமிழ் சிவில் சமூக அமையம்



# The arrest of Honorable MP Mr.Gajendrakumar Ponnampalam is an attempt to muzzle his voice exposing Tamil Genocide by Sri Lanka *-International Council of Eelam Tamil-*

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

08. June 2023, Norway


TNPF Leader Gajendrakumar Ponnambalam Arrested

Honorable MP Mr. Gajendrakumar Ponnambalam attended a public meeting on Friday, June 3, 2023, in Maruthankerny, Jaffna. Two police officers in civil attire entered the venue and threatened Mr. Ponnabalam. Two other police officers, one wielding a rifle, in an adjacent land got into a verbal assault in degrading language with Mr. Ponnambalam.

It was reported that the situation was instigated by the failure of two police officers in civil attire to identify themselves during this meeting. The individuals' refusal led to an argument between the crowd and the individuals. When MP Ponnambalam intervened, saying he had the parliamentary privilege and required them to show their identifications, one man managed to run away after assaulting MP Ponnambalam while the crowd apprehended the other person.

Point Pedro Police sub-inspector, Jayatissa, demanded the crowd to release the man confirming that the man apprehended by the crowd was State Intelligence Officer. The sub-inspector became verbally abusive (in Sinhala) when MP Ponnambalam requested that the apprehended man and the gun wielder be arrested. When the crowd demanded that the police identify and arrest the other individual who attacked MP Ponnambalam, the police promised to act. Instead, the police are arresting party members who managed to capture video evidence of the incident to intimidate them.

While Mr. Ponnambalam was planning to bring this up as a violation of his parliamentary privileges, the police arrested him on 7th of June 2023. They took him to Jaffna to prevent him from speaking same day in the Sri Lanka Parliament. It should be noted that Mr. Ponnambalam's father was also assassinated for speaking up for the Tamils. Four other Tamil parliamentarians were also assassinated in the past, but no one has been arrested.

The international community must recognize that if this state-sponsored brutality against Tamil parliamentarians is condoned, one cannot imagine what the ordinary Tamils will encounter with the police. The attempted threat to the life of MP Ponnambalam was executed within a week following the unlawful removal of MP Selvarajah Kajendran, showing a pattern of escalating repression against Tamils on the island, thus violating several Articles of the Universal Declaration of Human Rights.

The International Council of Eelam Tamils (ICET) calls upon unequivocal international condemnation of these violence and intimidation tactics on the Tamil people. Justice will only be served if the international community, human rights organizations, and those who value democracy and human rights send a clear message that the government administration must stop violating and ignoring the rights of the Tamil people it claims to represent. The above incidents make it clear that the occupied Tamil areas forcibly subjugated the Tamils violently. It should also be noted that MP Ponnambalam and his party members were leading a protest against the illegal construction of the Buddhist temple on private lands owned by Tamils in Thaiyiddy, Jaffna peninsula.

The above events prove that the Sinhalese are above the law in Sri Lanka! The Sri Lankan government must be held accountable for their actions against Eelam Tamils.

The international community's responsibilities:

· The international community can play a vital role in supporting Eelam Tamils affected by state terrorism. Governments and international organizations can exert diplomatic pressure on the Sinhala government.

· International human rights organizations and independent monitoring bodies can be invited to assess the human rights situation in Sri Lanka.

· The international community can provide financial, technical, and logistical support to local Tamil civil society organizations and human rights defenders who are working to protect the rights of Eelam Tamils.

· The international community can support the investigation and prosecution of perpetrators through cooperation with international criminal justice mechanisms.

· Governments and international human rights organizations can use their leverage to give political and economic pressure on Sri Lanka.

- International Council of Eelam Tamils-

International Council of Eelam Tamils (ICET) consist of the following country councils:

CETUK





உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## சிறுத்துப்போன வடையும், அது சொல்லும் செய்தியும்

### (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 17)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**

"நேயர்களுக்கு வணக்கம். இது லண்டன் பிபிசி உலக சேவையிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழோசை...

இன்றை பிபிசி தமிழோசையில் உங்களுடன் சிவராமகிருஷ்ணன்...

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே நேற்று முதல் கடும் மோதல்கள் நடைபெற்று வரும் நிலையில், வன்னிப் பகுதியில் இன்றைய கள நிலவரம் பற்றி அங்கிருக்கும் நமது வவுனியாச் செய்தியாளர் மாணிக்கவாசகத்திடம் தொடர்பு கொண்டு கேட்டேன்...

இற்றைக்குப் பதினான்கு வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் யுத்தம் மிகத்தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில் உண்மையான தகவல்களைப் பெற உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்த தமிழர்கள் பெரிதும் நம்பிய பிபிசியின் உலகசேவையில் அடிக்கடி கேட்ட இந்த ஒலிக்குறிப்பை எந்தத் தமிழரும் மறந்து போயிருக்க நியாயமில்லை. நாளாந்தம் இரவுச் செய்தியில் அன்றாடம் நடக்கும் சம்பவங்கள் பற்றி உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் உண்மையை ஓங்கி உரைத்த செய்தியாளர் மாணிக்கவாசகம் இன்று உலகில் இல்லை.

ஆனால் இலங்கைச் செய்தியாளர்கள் வழங்கும் செய்திகளை பிபிசியில் அதீத கரிசனையுடனும் அக்கறையுடனும் ஊடக தர்மத்தை மீறாமலும் தொகுத்து உரைத்த மூத்த ஒலிபரப்பாளர் சிவராமகிருஷ்ணன் அவர்களுடன் எனக்கு நெருங்கிய பழக்கமுண்டு. இலங்கைப்பொருளாதாரம் தொடர்பாக பேட்டிகளை நானும் அவ்வப்போது பிபிசிக்கு வழங்கியிருந்தேன். நன்கு அறியப்பட்ட விமல் சொக்கநாதன் அவர்களின் புத்தக வெளியீட்டில் கலந்து கொள்ள இலங்கை வந்திருந்தார். முள்ளிவாய்க்கால் யாழ்ப்பாணம் என்று ஊடகப்பயணம் செய்து விட்டு கொழும்பில் ஒருவாரம் தங்கயிருந்து அலுவல் பார்க்க வசதியாக இருக்கும் என்று வெள்ளவத்தையில் உள்ள ஒரு பெரிய ஹோட்டலில் அறை எடுத்திருந்தார்.

அந்த ஹோட்டல் பற்றி என்னிடம் அபிப்பிராயம் கேட்டார். நான் நாளாந்தம் வேலைக்குப் போகும் போதும் திரும்பி வரும்போதும் அந்த ஹோட்டலை வெளியில் மரைன் ட்ரைவிலிருந்து இருந்து பார்த்தளவில் சனநடமாட்டம் அதிகமாக இருந்தமையால் நல்லஹோட்டல் என்று நம்பியிருந்தேன். யாழ்ப்பாணத்திலிருந்து வந்து அதிகாலை ஹோட்டலுக்கு போனவரிடமிருந்து போன் வந்தது. சார், அந்த ஹோட்டல் அறை ரொம்ப மோசம், வேறு இடம் பாரக்கவேண்டும் என்று. கொள்ளுப்பிட்டியில் இவருக்கு ஏற்கெனவே பரிச்சயமான ஒரு ஹோட்டலைத் தடவியதில் உடனடியாக அவருக்கு அறை கிடைத்தது. அந்த ஹோட்டல் எனது காரியாலயத்திலிருந்து இரண்டு கட்டடங்கள் தள்ளி அமைந்திருக்கிறது. ஆகவே இது அவர் இங்கு இருக்கும் வரை விடாமல் அவருக்கு கரைச்சல் கொடுக்க வசதியாக வாய்த்தது. பாவம் அந்த வெள்ளவத்தைப் பெரிய ஹோட்டல். வானளாவிய கட்டத்தையும் ஏனைய வசதிகளும் இருப்பதாக கூறிக்கொண்டாலும் சர்வதேச அனுபவமுள்ள ஒரு ஊடகவியலாளரிடமிருந்து மிக மோசமான ஹோட்டல் என்ற நற்சான்று வாங்கியிருக்கிறது. ஆட்கள் வருகிறார்கள் என்பதற்காக வாடிக்கையாளர் திருப்தியை சற்றும் கருத்திற் கொள்ளாத ஹோட்டல்களும் தங்குமிடங்களும் நகரத்தின் மத்தியில் அதிகமிருந்தால் நாட்டின் உல்லாசப் பயணத்துறை வளர்ந்து கிழித்த மாதிரித்தான். "நீ விரும்பினால் வா இல்லாவிட்டால் போ" என்ற மனப்பாங்கில் தான் பல ஹோட்டல்கள் இயங்குகின்றனவேயன்றி டொலர்களில் கட்டணம் செலுத்துகிறார்களே அவர்களைத் திருப்திப்படுத்துகிறோமா என்ற கஸ்டமர் சட்டிஸ்பக்'ன் பற்றி கவனஞ் செலுத்துவது வெகு அபூர்வம்.



கனடாவிலிருந்து வந்து வெள்ளவத்தைப் பகுதியில் இருக்கிற ஹோட்டல்களிலும் விடுதிகளிலும் தங்கி விட்டுப் போனவை தங்களுடைய அனுபவங்களையும் இங்கு பதிவு செய்யலாம். சரி நமது விருந்தாளிக்கு நல்ல ஹோட்டல் அறை கிடைத்தது. சாப்பாடு? என் கண்முன்னாலேயே அவரிடம் ஒரு பெண் ஜோவியலாக அண்ணா நீங்கள் வெஜ்ஜா நொன்வெஜ்ஜா என்று கேட்டாள். நான்-வெஜ் என்று பதில் சொன்னார். என்ன சொல்கிறார்? நான் ஒரு வெஜிடேரியன் என்கிறாரா அல்லது நான் ஒரு நொன்வெஜிடேரியன் என்கிறாரா என்று புரியாமல் மீண்டும் அவள் அதே கேள்வியை கேட்க அவரும் மீண்டும் அதே பதிலைச் சொல்ல அவள் தலையைப் பிய்த்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள். அவரொரு தாவரப் பட்சி. கொழும்புக்கு வந்தால் கோன் பிளேக்ஸையும் பால் பைக்கற்றையும் வைத்து சமாளிக்க அவருக்குத் தெரியும். கொள்ளுப்பிட்டி ஹோட்டலில் சாப்பாடு இல்லாமல் அறைவாடகை குறைவு. அவரோ அசைவம் சாப்பிடுவதில்லை. பிறகேன் சைவ சாப்பாட்டுக்கு அவ்வளவு பெரிய தொகையைக் கொடுப்பான்? ஆனால் அக்கம்பக்கத்தில் அருவருப்பில்லாமல் சென்று உட்கார்ந்து சாப்பிடுமளவுக்கு ஒரு சைவக் கடை இல்லை. மகாபெரிய ஒரு ஆங்கிலப் பெயருடன் கொள்ளுப்பிட்டிச் சந்திக்கருகில் ஒரு சைவக்கடை உண்டு. அங்கு சென்று சாப்பிடுபவர்களுக்கு சுடச்சுட தோசை வடை போன்றவை கிடைக்குதோ இல்லையோ ஆனால் அங்குள்ள (அ)சுத்தம் நிச்சயம் சுகம் தராது. ஆகவே இரவுச் சாப்பாட்டிற்கு கொள்ளுப்பிட்டியிலிருந்து புறப்பட்டு வெள்ளவத்தையின் தெற்குக் கோடி ராமகிருஷ்ண மிஷனுக்கு அருகில் உள்ள ஒரு உணவகத்திற்கச் சென்றோம். சூடாக என்ன கிடைக்கும் என்று வெயிட்டரிடம் கேட்டார். சூடாக சுடுதண்ணி கிடைக்கும் என்று பதில் வருமோ என்று பயந்தேன்.




எல்லாமே புதிதாகப் போட்டுத் தருவோம் சார். ஓடர் பண்ணுங்கள் என்று பௌவியமாக பதில் வந்தது. ஒரு தோசை ஒரு வடை ஓடர் செய்தோம். கொண்டு வந்தார்கள். சாப்பிட்டோம். ஓ... சாப்பாடு ரொம்ப நல்லாருக்கு சார் என்றார். உண்மைதான் போல. ஏனென்றால் எனக்கும் சைவசாப்பாடுகளுக்கும் ஏழாம் பொருத்தம். நல்லாருக்கா இல்லையா என்று நான் சொல்ல முடியாது. அவர் கைகழுவப் போக நான் கார்ட்டைத் தேய்த்து பில்லைச் செலுத்திவிட்டேன். அவருக்கு அவருடைய இந்திய கிரடிட் கார்ட்டை இலங்கையில் உள்ள மெஷின்களில் தேய்த்துப்பார்க்க அவ்வளவு ஆசையாம். நீங்கள் ஆசையாய் அதைப் பிறகு தேய்க்கலாம் சார் வாருங்கள் போகலாம் என்று கூட்டிவந்து விட்டேன். இன்னொருநாள் பகல் பொழுது. பசித்தது. சார் சாப்பிடப்போவோமா என்றேன் சரி என்றார். ஆனால் மீண்டும் வெள்ளவத்தை தெற்கு செல்ல பஞ்சியாக இருந்தது. கிட்ட ஏதாவது இடம் இருக்குமா என்று கூகுள் அக்காவைக் கேட்க "பம்பலப்பிட்டியில் மெரைன் ட்ரைவிலேயே ஜயா வீதிக்கருகில் ஒரு சைவ ரெஸ்டோரண்ட் இருக்கென்றாள்". அட ஒவ்வொரு நாளும் அதால தானே போய்வாரன் ஏன் கவனிக்காமல் விட்டேன் என்று யோசித்தபடி அங்கு போனோம். கூட்டம் அதிகமில்லை. என்ன இருக்கென்று அவர் கேள்வி கேட்க முன்பு சோறு சாப்பிடுவோம் என்றேன். மெட்ராஸ் தாலி இருக்கென்றார் வெயிட்டர். ஓ... அப்படியென்றால் பொண்ணும் பார்த்துக் கொடுப்பீர்களா தாலிகட்டுவதற்கு என்று கேட்கத் தோன்றியது. வைத்திருப்பது சைவக்கடை பெரும்பாலான கஸ்டமர்கள் இலங்கையர்களும் தென்னிந்தியர்களும் அப்புறம் ஏன் சோற்றுக்கு பெயர் வைக்கிறீர்கள் தாலியும் தையலும் பொட்டும் என்று? கஸ்மாலம் என்று மெட்ராஸ்பாசையில் திட்டத் தோன்றியது. ஏனோ தெரியவில்லை. இலங்கையில் இந்த வடஇந்தியப் பெயர்கள் ஒரே குரங்குப்பிடியாக வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் சாப்பாடு பிரமாதமாக இருந்தது. இடைநடுவில் மீண்டும் சோறு உட்பட கறிகளை கேட்டுப்பெற்றுக்கொள்ள முடிந்தது. சிப்பந்திகள் நட்புணர்வுடன் பழகினார்கள். ஆனால் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் தும்முல்லைச் சந்தியில் நீண்டகாலமாக இயங்கிவரும் ஒரு சைவக்கடையில் எப்போதுமே அளவுச் சாப்பாடு தான். மேலதிகமாக சோறு கேட்டால் அதற்கு மேலதிக பணம் செலுத்த வேண்டுமோ என்ற பயம் வேறு. பொதுவாக தமிழர்களால் நடத்திச் செல்லப்படும் உணவகங்களில் வழங்கப்படும் ஒரு பிளேட் உணவின் அளவு குறைவாக இருப்பதை தொடர்ச்சியாக அவதானித்திருக்கிறேன்.

ஒரு முண்டாசு சின்னத்துடன் இந்தியாவிலும் இலங்கையிலும் இயங்கும் அசைவ உணவகத்தின் சோற்றுப்பார்சலின் அளவு ஆரம்பத்தில் ஒரு ஆளுக்குப் போதுமாக திருப்திகரமாக சாப்பிடும் அளவில் இருந்தது. ஆனால் இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக ஒரு சிறிய பெட்டியில் ஏதோ ரேஷனுக்கு இலவசமாக பஞ்சச் சாப்பாடு போடுவது போல காக்காவுக்கு சோறு போடப் போதுமானளவுக்கு அளவு சிறுத்துப் போய் விட்டது.

ஆனால், விலை முன்னரைவிட மிகவும் அதிகரித்திருக்கிறார்கள். வாசகர்கள் இப்போதைக்கு இதைக் குறித்துவைத்துக் கொள்ளவும். முஸ்லிம் கடைகளில் சாப்பாட்டுப்பார்சலின் அளவு இன்னமும் தாராளமாகத் தான் இருக்கிறது. சாப்பாட்டில் வஞ்சகம் செய்யக் கூடாது என்ற அவர்களின் கொள்கை இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் தமிழர்கள் மற்றவர்களிடம் பணம்வாங்கிக்கொண்டு சாப்பாடு போடும் போதும் மிகவும் கஞ்சத்தனம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

அந்தளவில் மரைன் ட்ரைவில் உள்ள அந்த சைவ உணவகம் சற்று வித்தியாசம். அடுத்த தடவை மீண்டும் அதே உணவகத்தில் இட்டிலியும் வடையும் ஓடர் பண்ணிவிட்டு காத்திருந்தோம் இருபது நிமிடத்தின் பின்னர் வந்தது. இட்டிலியிலும் வடையிலும் புறங்கையை வைத்துப்பார்த்தவிட்டு வடைபுதுசு இட்டிலி பழசு என்று திருப்பி அனுப்பி விட்டார். மீண்டும் 20 நிமிடம் இட்டிலியும் வடையும் சுடச்சுட வந்தது. வடையை எடுத்து அதன் நடுவில் இருந்த ஓட்டை வழியே பார்க்க மரைன் டரைவுக்கு அப்பாலிருந்த கடல் தெளிவாகத் தெரிந்தது. உற்றுப்பார்த்தால் சிலவேளை இந்தியாவும் கூட தெரியலாம். வடை சிறுத்துப் போய் அதன் நடுவில் இருந்த ஓட்டை பெரிதானதால் ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சி இது. ஆனால் 70 ரூபாவாக முன்னர் இருந்த வடை இப்போது 250 ரூபா ஆகியிருக்கிறது.

முன்னர் நாம் கண்ட சிறுத்துப்போன சோற்றுப்பார்சல் இப்போது சிறுத்துப் போன இந்த வடை இரண்டுமே முக்கிய பொருளாதார விடயங்கள் தான். பணவீக்கம் நிலவும் காலங்களில் தமது வாடிக்கையாளர்களை தக்கவைத்துக்கொள்ளவும் இலாபங்களை பெருக்கிக் கொள்ளவும் வியாபார நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் வியாபார தந்திரம் - அளவைக் குறைத்து விலையை அதிகரிப்பது. இதனை சுருக்கவீக்கம் (shrinkflation) என்று அழைப்பார்கள். இலங்கையில் சிறுவர்கள் விரும்பிப்பருகும் வெனிலா பால் பக்கற்றில் ஆரம்பத்தில் 250 மில்லி லிற்றர் இருந்த நிலைவு இது படிப்படையாகக் குறைந்து 180 - 170 மில்லி லிற்றராகக் குறைந்து விட்டது. அதேபோல் மெகி நூடில்ஸ் 100 கிராதில் இருந்து 72 கிராமாகக் குறைந்து விட்டது. ஆனால் விலைகள் நான்கு மடங்கு அதிகரித்திருக்கின்றன. இது போல பல்வேறு பொருள்களை நாம் உதாரணம் சொல்ல முடியும். பெற்றோல் டீசல் எரிவாயு விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி விலைகளை பலமடங்கு அதிகரித்த ஜெகஜ்ஜாலக் கில்லாடிகள், இப்போது எரிபொருள் விலைகள் மிகக் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ள போதிலும் தங்களுடைய பொருள்விலைகளை குறைக்க மாட்டார்கள்.

இந்த இடத்திலேயே மக்களின் நன்மை கருதி பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு அவசியமாகிறது. குறிப்பாக மக்களின் உணவுப்பொருள் விலைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கம் இதை வடையிலுள்ள ஓட்டை பிரச்சனையாகப் பார்க்காமல், அந்த ஓட்டை ஏன் பெரிதானது என்பதை ஆராய்ந்து, மக்களின் உணவுத் தேவையை உணர்ந்து செயல்பட முன்வர வேண்டும். இல்லையென்றால் அந்த ஓட்டை வழியாக ஓட்டு வேறெங்காவது விழுந்துவிடும்.



IN SUPPORT OF SHN SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION

Love Scarborough

# SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION

மற்றும் தாயகத்திலுள்ள சிவபூமி அறக்கட்டளைக்குமான
நிதி சேர்க்கும் மாபெரும் இசைநிகழ்வு

IN SUPPORT OF SENIORS HOME JAFFNA
SIVAPOOMI TRUST
சிவபூமி அறக்கட்டளை

ASIYANS Quality Forever
Men's Waer Women's Waer, Kids Wear
Utilities, Gift & Jewelry Items
Fashion, Apparel & Garments
# 23, 3601 Lawrence Ave E,
Scarborough, ON M1G 1P5
Tel: 416-438-6568

NEW OCEAN SUPERMARKET
5635 Finch Ave E,
Scarborough, ON M1B 5K9
Tel: 416-292-0122

Sharon BUS LINES
Call: PRIYAN
Tel: 416-897-3569 / 416-906-7575
E:sharonbuslines@gmail.com
www.sharonbuslines.ca

HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc.
5215 Finch Ave E #20, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969

## இராகாலயா நுண்கலைக் கூடம் வழங்கும்

# கானமாருதம் 2023

Raagalaya Fine Arts of Ontario
இராகாலயா நுண்கலைக் கூடம்

2300 Pharmacy Ave, Scarborough, ON M1W 1H8

**JUNE 17, 2023 SATURDAY 5:30 PM**



நூற்றுக்கும் மேற்பட்ட இன்னிசைக்
கச்சேரிகளை மேடையேற்றி,
புகழ்பெற்ற இராகாலயா அதிபர்,
சங்கீத கலா வித்தகர்,
இன்னிசை வாணி,
ஸ்ரீமதி. லசந்தி இராஜ்குமார்
மற்றும் பிரபல இந்திய முன்னணி
இசைக்கலைஞர்களுக்கு பின்னணி
இசை வழங்கிய பிரபலமான
Mega Tuners இசைக்குழுவினர்களும்
இராகாலயா மாணவர்களும்
இணைந்து வழங்கும்
மிகப் பிரமாண்டமான
இன்னிசை, வாத்திய விருந்து.








Allstate motorcycle insurance

## அனைவரும் வாருங்கள்! ஆதரவு தாருங்கள் !!

சிறப்புற வாழ்த்துகள் கானமாருதம் 2023
டேவிற்சன் குடும்பத்தினர்

SPRING FLORIST
3011 Markham Road,
Scarborough, ON M1X 1L7
RAJAH SATKUNAM
Tel: 416-903-5069

Pasumai Market பசுமை
2-2002 Middlefield Rd,
Markham, ON L3S 1Y5
Tel: 905-472-5525

Travel with us with the lowest fare, We'll give you the best service and care...
deal Ideal Kempe Vacation Ltd.

Call me for ALL YOUR REAL ESTATE NEEDS
• BUYING / SELLING / INVESTING
• PRE-CONSTRUCTION
416.992.9243
ATHAVE PARAMESWARAN
HOMELIFE

Chapel Ridge
Funeral Home &
Cremation Centre
8911 Woodbine Ave,
Markham, ON L3R 5G1
Tel:905-305-8508

AKT PREMIUM QUALITY WHOLESALE & RETAIL
416 291 2838
8-2002 Middlefield Rd, Markham, ON L3S 1Y5

HOMELIFE
YOUR INTEREST IS MY CAPITAL
THINKING OF SELLING YOUR HOME?
SRI SIVASUBRAMANIAM
416-884-3991
7 Eastvale Dr #205, Markham, ON, L3S 4N8

அனுமதிச் சீட்டுக்கள் : 50$ / 20$ மண்டப வாசலிலும் பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகட்கு : 647.224.3546 / 905.943.9047

## "கனடா இந்து" வழங்கும் துர்க்கேஸ்வர மஹாயாக

# துர்க்கேஸ்வரத்தில்

# 18-6-2023 ஞாயிறு



## துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி ஐந்து தள ராஜகோபுரத்துடன்

றொறன்ரோ, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவானது எதிர்வரும் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. கனடாவில் முதன் முதலாக 48 தின யந்திர பூஜையுடனும் 12 தினம் கிரியைகளுடனும் 12 கால யாகத்துடனும் 48 தின மண்டலாபிஷேகத்துடனும் இந்த மஹாகும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு திருக்கோவில்களில் இருந்து சிவாச்சாரியர்கள் வருகை தருகின்றனர். ஆயிரக்கணக்கான மஹாகும்பபி'ேகங்களை உலகெங்கும் நிகழ்த்திய பிள்ளையார்பட்டி டாக்டர். கி.பிச்சைக் குருக்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது

## துர்க்கேஸ்வரத்தில் பக்தர் நிகழ்த்தும் தீபஸ்தாபனத்துடன் கூடிய தீபலட்சுமி பூஜை 16-6-2023 வெள்ளி

பாலரூபத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பாலாலயத்தில் வீற்றிருக்கும் தெய்வ சக்திகளை, கிரியைகள் மூலமாகவும் மத்திரபூர்வமாகவும் வியாபகமாக்கி, 48 தினங்கள் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பூஜிக்கப்பெற்ற சக்தி வாய்ந்த யந்திரங்களுடன் ஒன்று சேர்த்து, புதிதாக புனருத்தாரணம் செய்த ஆலயத்தினுள் வரவழைக்கும் போது, முதலாவதாக செய்யப்பெறும் தீபஸ்தாபனம் மேன்மைமிக்கது. சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் இணைந்து இவ்வழிபாட்டினைச் செய்யவுள்ளனர். பொதுவாக வரலட்சுமி விரத தினத்தில் பக்தர்கள் திருவிளக்குப் பூஜை செய்வார்கள். ஆனால், தீபஸ்தாபனத்தின் போது, தீபலட்சுமிக்கு பூஜையும் அத்துடன் தீபங்களை புதிய ஆலயத்தில் ஸ்தாபிக்கும் பேறும் கிடைக்கின்றது.

## யந்திரபூஜை ஏப்பிரல் 21ம் திகதி ஆரம்பமாகி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர், சிக்கல் சிங்கார வேலவர், திருச்சி பூமிநாதர், நெடுங்குடி கைலாசநாதர் போன்ற ஆலயங்களில் வழிபடப்பெற்று குருமார்களின் ஆசிகள் பெறப்பெற்று, கனடா வந்தடைந்த "யந்திரங்களுக்கு" துர்க்கேஸ்வரத்தில் விஷேட குருமார்கள் தினமும் பகலும் இரவும் பூஜைகள் நடாத்தி வருகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகங்களின் கீழே வைக்கப் பெற்று அருட்சக்தி வழங்கும் சக்திமிகு உலோகத் தகடுகளால் யந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாகவும் பக்திபூர்வமாகவும் நிகழும் யந்திரபூஜையை தரிசித்து பக்தர்கள் அருள்பெற்றுவருகின்றனர்.

# யூன் 7ம் திகதி

## மஹாகும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்

7-6-2023 புதன் கிழமை காலை 8.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தின் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பிக்கின்றன. முக்கிய அம்சமாக ஏழுவகையான ஹோமங்களை நிகழ்த்தவுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 7-6-2023 | காலை | கணபதி ஹோமம் |
| 7-6-2023 | மாலை | மஹாலட்சுமி ஹோமம் |
| 8-6-2023 | காலை | நவக்கிரக ஹோமம் |
| 9-6-2023 | காலை | ஸ்கந்த ஹோமம் |
| 10-6-2023 | காலை | நவதுர்க்கா ஹோமம் |
| 10-6-2023 | மாலை | பிரத்தியங்கராதேவி ஹோமம் |
| 11-6-2023 | மாலை | ஸ்ரீவித்யா ஹோமம் |

ஒவ்வொரு ஹோமமும் ஒவ்வொரு தனிச்சிறப்பு உடையவை. அவற்றின் தரிசனமும் பங்கேற்பும் மகத்துவம் வாய்ந்தவை. அவற்றில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஹோமத்தினையும் பல குருமார்கள் இணைந்து செய்யவுள்ளனர். காலையில் நிகழும் ஹோமங்கள் காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும். மாலையில் நிகழும் ஹோமங்கள் மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.




## கனடாவில் நிகழும்

## மஹாகும்பாபிஷேக மஹாவிழாவுக்கான சிறப்பிதழ்

# மஹாகும்பாபிஷேகம்

## காலை 6.00 மணி முதல்

## அம்பாள் தேவஸ்தானம்

## புதிதாய் புனர்நிர்மாணம்

## மஹாகும்பாபிஷேக யாகபூஜை

### யூன் 12ம் திகதி முதல் யூன் 18ம் திகதி வரை

துர்க்கேஸ்வரம் திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேக யாகபூஜைகள் 12-6-2023 திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு அங்குரார்ப்பணத்துடன் ஆரம்பமாகின்றது. அன்று மாலை முதல் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை காலை வரை காலையும் மாலையுமாக 12 காலங்கள் யாகபூஜை தினமும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு யாகபூஜையின் போதும் விஷேட திரவ்விய ஹோமத்திலும் நவசக்தி அர்ச்சனையிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று அருள்பெறவுள்ளனர். யாகபூஜைகளின் தரிசனம் மட்டுமன்றி ஹோமப்புகை சுவாசம், மற்றும் பங்கேற்புக்களும் மகத்துவம் வாயந்தவை.

### 18-6-2023 ஞாயிறு

**அதிகாலை 4:00 மணி முதல் காலை 6:00 மணி வரை**

12ம் கால யாக பூஜை, ஸ்பர்சாஹுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத, ஸ்தோத்ர, திருமுறை பாராயணம், யாத்திராதானம், கும்பங்கள் (கடங்கள்) வீதிவலம் முதலியன

**காலை 6:30 மணிக்கு விமான (ஸ்தூபி) கும்பாபிஷேகம்**

**காலை 7:00 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம்**

**காலை 7:28 மணி முதல் காலை 7:40 மணிக்குள்**
**மஹாகணபதி, ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும்**

### மஹாகும்பாபிஷேகம்

தொடர்ந்து தசதர்சனை, யஜமானபிஷேகம், மஹாபிஷேகம் விஷேடபூஜை, தீபாராதனை, அர்ச்சனைகள் முதலியன

**பகல் 12:30 மணிமுதல் அன்னதானம் வழங்கப்படும்**

**மாலை 5:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை**

சாயரட்சை பூஜை, விஷேட இசை நிகழ்ச்சி, வசந்தமண்டப பூஜை, விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்

## மாபெரும் வழிபாடு

## துர்க்கேஸ்வரத்தில் இரண்டு தினங்கள் எண்ணெய்க்காப்பு

### யூன் 16, 17ம் திகதிகளில்

மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கிரியையிலும் பெரும் அர்த்தங்களும், சிறப்புக்களும் உண்டு. அவற்றில், விஷேட மகத்துவம் கொண்ட ஒரு கிரியை "எண்ணெய்க்காப்பு" என்று அழைக்கப்படுகின்ற தைலாப்பியாங்கம். அடியார்கள் கர்ப்பக்கிரகத்தினுள் சென்று தம் கரங்களால் தர்ப்பைப் புல் எடுத்து எண்ணெய்யில் தொட்டு, இறைவனினின் திருவுருவங்களுக்கு சாத்தி வழிபடுதலையே எண்ணெய்க்காப்பு என அழைப்பர். பொதுவாக, சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவோ, இறைஉருவங்களைத் தொடவோ, அபிஷேகிக்கவோ உரிமை உண்டு. ஆயினும், மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கோ அல்லது இறையுருங்களைத் தொடுவதற்கோ எந்தவொரு நாளிலும் கிடைக்காத பாக்கியம் பக்தர்களுக்கு கிடைக்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பம் மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வாகும். இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது புதிய ஆலயம் அமைக்கும்போதோ மட்டும் கிடைக்கும். அன்றைய தினம், பக்தர்கள் தர்ப்பையில் எண்ணெய்யைத் தொட்டு, இறைவனின் கண், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய சகல அங்கங்களும் குளிரும்படி சாத்த வேண்டும்.

பக்தர்களின் வசதி கருதி, துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தில் இரு தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.





1950 -

## 31-ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 12-05-2023 இறைபதம் எய்திய

### அமரர் திருமதி லலிதாமணி கிருஷ்ணமூர்த்தி

அவர்களின் 31-ஆம் நாள் அந்தியேட்டி கிரியையும், ஆத்ம சாந்தி
பிரார்த்தனையும் எதிர்வரும் 11-06-2023 ஞாயிற்றுக்கிழமை நண்பகல்
12:00 மணி அளவில் நமது இல்லத்தில் நடைபெறும்.


இத்தருணத்தில், எங்கள் துக்கத்தில் பங்கு கொண்ட,
ஆறுதல் தெரிவித்த, அனைத்து உற்றார், உறவினர்களுக்கும்,
நண்பர்களுக்கும், மற்றும் ஊரவருக்கும் எங்கள்
குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிதனைத்
கூறிக்கொள்வதோடு, அம்மாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
நிகழ்வுகளில் கலந்து மதியபோசன நிகழ்விலும் இணைந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

முகவரி:
**40 Degrey Dr, Brampton, ON L6P 2Y5 Canada**

# "அரசுடன் இனி பேச்சு இல்லை" – சம்பந்தர் அறிவிப்பு

- நடராசா லோகதயாளன்



இலங்கை அரசுடன் இனி பேச்சுவார்த்தைகள் இல்லை என்று நாட்டின் மிக மூத்த தமிழ் தலைவரான இரா சம்பந்தர் அறிவித்துள்ளார்.

"இனஅழிப்பிற்கு நீதியான விசாரணை இல்லை, பேச்சுக்களில் தீர்வில்லை எனவே இனி எந்தப் பேச்சிலும் நாம் கலந்துகொள்ளப்போவதும் இல்லை" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவிடம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உறுதிபடத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கும் இடையே வியாழக்கிழமை (8) மாலையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே சம்பந்தர் இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

"பேச்சுக்கள் பேசி ஓய்ந்தனவே அன்றி எந்த தீர்வையும் வழங்க நீங்கள் தயாராகவில்லை. அதனால் இனியும் பேச நாங்களும் தயாராக இல்ல. பேசியவற்றிற்கே தீர்வில்லாதபோது இனியும் பேசுவது அர்த்தமற்றது" என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவின் தலைவர் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

"நீங்கள் அழைத்தபோதெல்லாம் நாம் பேச்சில் பங்குகொண்டோம் அதாவது ஒன்று இரண்டு ஆண்டுகள் அல்ல 14 ஆண்டுகளாக வந்துள்ளோம் ஏனெனில் வாய்ப்புக்களை அல்லது பேச்சுக்களை நாம் தள்ளிப்போட்டோம் அல்லது குழப்பினோம் என சர்வதேசம் எம்மை நோக்கி விரலை திருப்பக்கூடாது என்பதற்காக மட்டுமேயாகும்" என்று சினத்துடன் கூறியதாக பேச்சுவார்த்தைகளில் அவருடன் பங்குபெற சென்றவர்கள் "கனடா உதயனிடம்" தெரிவித்தனர்.

அரசுகள் மாறினாலும் தமிழ் மக்களிற்கான நியாயமான மற்றும் நிலைத்திருகக் கூடிய தீர்வொன்றை பெற்றிட வேண்டும் என்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியக முயன்று, அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளிலும் தொடர்ந்து பங்குபெற்றதையும் அவர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

"தமிழ் மக்களிற்கு தொலைநோக்கு பார்வையுடன் நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக எவ்வளவோ எதிர்ப்பு எமக்கு வந்தபோதும் ஒத்துழைத்தோம். எப்போது பேச்சுக்கு அழைத்தாலும் ஒத்துழைத்தோம் மாறாக என்ன பயன் கிட்டியது. எமது மக்களிற்கு என்ன நன்மை கிட்டியது?"

ஏற்கனவே பேசிய விடயங்களை செய்து முடிக்கும்வரை இனி அரசுடன் பேச்சுவார்த்தை என்ற கேள்விக்கே இடமில்லை என கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதியிடம் உறுதிபட கூறிவிட்டார்.

"நாம் இனியும் அரசுடன் பேசத் தயாராக இல்லை. பேச வேண்டியவை எல்லாம் பேசியாகிவிட்டது. இனி அந்தக் கருமங்களை செய்ய வேண்டியதுதான் உங்கள் கடமை. அவற்றை நீங்கள் செய்யும் வரைக்கும் எந்தப் பேச்சுக்கு அழைத்தாலும் இனி நாம் வரப்போவது கிடையாது".

அரசுடன் முன்னர் இடம்பெற்ற பேச்சுக்களை நினைவுகூர்ந்த சம்பந்தர், எந்த அரசாக இருந்தாலும், அவர்கள் இதயசுத்தியுடன் நடந்துகொள்ளவில்லை, இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் இழுத்தடிப்பு வேலையே செய்துள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டினார் என்று ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் கூறுகின்றனர்.

"தீர்வு விடயத்தில் சந்திரிக்கா அம்மையார், மகிந்த ராஜபக்ச காலத்து தீர்வுகள் உள்ளன. ஒரு தீர்வை வழங்க இவற்றை ஆராய்ந்தாலே போதும் அது இல்லாமல் காலத்தை இழுத்தடிப்பதால் எந்தப் பயனும் கிட்டுவதாக நெரியவில்லை".

இவ்வாறு சம்பந்நர் கடும் பிடிபிடித்தபோது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர் பேச்சின்றி வாயடைத்து போய் கேட்டுக்கொண்டிருந்தார் என்று அறிய முடிகிறது.

இந்தச் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மாவை சேனாதிராஜாவும் அரச தரப்பில் ரணில் விக்கிரமசிங்காவுடன் 6 அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

யதார்த்தமாக முடிவெடுத்து பொறுமை காக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவருமான இரா. சம்பந்தர் அரசுடன் இருந்த அத்தனை தொடர்புகள், உறவுகள், பேச்சுக்களை முறித்தமை தொடர்பில் ஆய்வாளர்கள் பெரும் அதிர்ச்சியில் அரசியல் ஆய்வில் ஈடுபட்டுள்ளதோடு அடுத்து என்ன என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

இதேநேரம் மாகாண சபையோ அல்லது உள்ளூராட்சி சபைத் தேர்தலோ இந்த ஆண்டு இடம்பெற மாட்டாது இருப்பினும் இடைக்கால சபை அமைக்கலாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதிலளித்தார்.



## கனடா வாழ் எழுத்தாளர் க. நவம் அவர்கள் அனைவரையும் அன்றைய தினம் தனது நூல் வெளியீட்டு விழாவிற்கு அழைக்கின்றார்






**மின்சார வாகனங்கள் மற்றும் பற்றரிகளைத் தயாரிப்பது தற்போதும் எதிர்காலத்திலும் வேலைகளை உருவாக்கி வருகின்றது.**


**மேலும் அறிக ontario.ca/BuildingOurEconomy**

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

**Ontario**



# மொன்றியால் மாநகரில் "கைதி இல 1056" நூல் அறிமுக விழா



Prisoner 1056 ஆங்கில நூல் அறிமுகம் எதிர்வரும் ஜூன்11ம் நாள் ஞாயிறு மாலை 3 மணி (11.06.2023) அளவில் மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கல்யாணமண்டபத்தில் நடை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

தனது 17வது வயதில் தமிழர்களில் ஒருவராக இலங்கை அரசின் காவல்துறையினரால் தேச விரோத தமிழர்களுள் ஒருவரென சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு சித்திரைவதைகளுக்குள்ளாகிப் பின் அவரது தந்தையின்பகீரத முயற்சியினால் விடுதலையாகி 50 டொலர்களுடன் கனடிய மண்ணில் காலடி வைத்து இன்று சுதந்திரக் கனடியக் குடிமகனாகவும், கனடாவின் மிகப்பெரிய நிறுவனமான CANADA'S LARGEST INDEPENDENT ASSET MANAGEMENT COMPANY யின் உயர் அதிகாரியாகப் பணியாற்றுபவருமான Roy Rathinavel அவர்களின் சிறை அனுபுவங்களும் - சுதந்திரத்திற்கான தேடல்களும் என்ற நூல் அறிமுகமாகவுள்ளது. கனடிய முன்னாள் பிரதமர் கௌரவ பிறைன் மல்றோனி உட்பட பல தலைவர்களிலும் கல்வியாளர்கள் - பிரமுகர்களாலும் விமர்சிக்கப்பட்டும் பாராட்டும் பெற்ற இந்நூல் ஆசிரியரை கனடிய CTV தொலைகாட்சி நேர்காணல் செய்தமை நாம் பெருமைபடக் கூடிய விடயமாகும்.

இந்நூல் **PENGUIN RANDOM HOUSE, VIKING** பதிப்பதத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

நூல் அறிமுக விழா ஒருங்கிணைப்பாளர்களாக திருவாளர் வாகிசன் நடராஜா. பாலசிங்கம் கருணானந்தன். வீணைமைந்தன் ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு: (514) 924-3436 - (514) 684-3604**

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

H. N. G. Fernando, C.J.

"Afterwards, the Ordinance No. 5 of 1835, (which was allowed and confirmed by Her Majesty) repealed parts of the said proclamation, but expressly reserved and retained so much of it as doth publish and declare that ' the administration of justice and police within the settlements then under the British dominion and known by the designation of the maritime provinces should be exercised by all the courts of judicature, civil and criminal, according to the laws and institutions that subsisted under the ancient Government of the United Provinces.'1 Bam. p. 316.

"The Ordinance of 1835, itself expressly re-enacts this, and it uses the following words, 'which laws and institutions it is hereby declared are and shall henceforth continue to be binding and administered through the said maritime provinces and their dependencies, subject nevertheless to such deviations and alterations as have been or shall hereafter by lawful authority be ordained.'

"We humbly consider that by these declarations of the royal will, Her Majesty's subjects in this island, who had or might have any money due to them from the local Government for wages, for salary, for work,
for materials, in short for anything due on an obligation arising out of contract, were permitted to retain the old right given by Roman Dutch Law to sue the advocate of the fiscal, now styled the Queen's Advocate,
for recovery of their money. And if the present plaintiff could have shown that any money was due to him under his colonial appointment as Galle post-master, he might have maintained this action. He might have done so in respect of salary due for any period during which he actually served, and also in respect of the further period for which he, still holding the appointment de jure, was ready and willing to serve, but was prevented from serving by the wrongful act of his employer."

This statement of the law of Ceylon cannot be regarded as being merely obiter. It is clear that, if any salary earned by the plaintiff prior to the date of his dismissal had not in fact been paid to the plaintiff, the Court
would have given judgment for the plaintiff for the unpaid amount; this on the basis that a right to sue for salary had existed under the Roman-Dutch Law.

The general question of the right of the subject in Ceylon to sue upon a contract with the Crown was considered in the case of Jayawardena v. Queen's Advocate1. The Court there stated that "the right to sue the Crown in the person of the Queen's Advocate for claims arising ex contractual has not only been upheld by the Courts of the Colony, but has been recognized by the Legislature in several enactments Reference
was thereafter made to Ordinances No. 9 of 1852, No. 7 of 1856 and No. 11 of 1868, all of which contemplated the possibility of suits upon contract by private parties against the Queen's Advocate. There followed the following observations: — "Under these circumstances, we think it too late, at this day, to contest in this Court the validity of this practice. We are bound by the previous decisions of this Court, particularly by the considered decision of the Collective Court in the case of Fraser v. The Queen's Advocate. To hold at this date, for the first time, that a practice, which has so long been sanctioned by the Courts and acquiesced in by the Government, is bad in law, and cannot be sustained, would necessarily create widespread confusion and inconvenience, practically amounting in many cases to injustice. If the precedents and decisions upon which this Court acts are wrong, it must be left to the Court of appeal to set us right. 1 4 S. C. Circular 77. H 9733 (12/87) 126

It was urged by the Queen's Advocate that the practice of suing the Crown is an attempt to impugn the royal prerogative, by virtue whereof no suit or action can be brought against the sovereign; and such, no doubt, it would be if the prerogative has not been waived in this respect. This Court in Fraser's case humbly expressed an opinion that it had been so waived, and we humbly venture to share that opinion. It should be observed that the question is, after all, one purely of procedure. If a judgment be obtained against the Queen's Advocate, no execution can issue either against the Queen's Advocate personally or against the Crown. See Marshall, p. 75; Thomson's Institutes, p. 12. A judgment in an action or suit ex contractual against the Queen's Advocate gives little, if anything, more than a successful petition of right would do in England. It is merely, as it appears to us, a mode of procedure by which a subject is able to prefer and substantiate his claim against the Crown. Compliance with the claim when substantiated must still be, as we take it, a matter of grace.
Petitions of right are now in England prosecuted as ordinary actions; and as a matter of convenience, we see no objection to parties preferring their claims against the Crown here in the form of a suit against the Queen's Advocate."

The learned Acting Attorney-General in his argument before us suggested that Fraser's case, while rightly deciding that the Crown could be sued upon a contract in Ceylon, was wrong in basing the decision on the Roman-Dutch Law. He further argued on the authority in the concluding passage cited above from Jayawardena 's case that the waiver of immunity from suit by the Crown in Ceylon consisted merely of the acknowledgment of a right to sue the Crown in lieu of the right under English Law to proceed by way of a petition of right. His argument, in my opinion, gains support from the observation in Jayawardena 's case that a suit ex contractual against the Queen's Advocate appears to be merely a mode of procedure by which the subject is able to prefer his claim, and is thus the equivalent of the English Petition of Right.
Shortly after Jayawardena 's case, there was decided in the Privy Council the case of Siman Appu v. Queen's Advocate 1, in which it was held that a suit upon a contract can be instituted in Ceylon against the Queen's Advocate as representing the Crown. Their Lordships considered the question whether the Roman Dutch Law entitled a subject to sue an Officer of Government on behalf of the Government. The note of the argument of Counsel in that appeal shows that Fraser's case (as reported in Creasey's Reports p. 10) and Jayawardena 's case (incorrectly cited as Fernandez v. The Queen's Advocate) were considered in the discussion of this matter. But their Lordships concluded their consideration of the question with these observations:

"There certainly seems no more antecedent reason why the Counts of Holland should be exempted from suit through their officers than (1 9 App. Cases p. 571.127) existed for the exemption of the King of Scotland. And though it is very likely that whilst great potentates, like the Dukes of Burgundy and the Kings of Spain, were Counts of Holland, it would not be very safe to sue them, yet when the United Provinces became independent, suitors might find themselves more favourably placed." (To be continued…)



# யாழ்–சென்னை விமான சேவை மேலும் வாய்ப்பை வழங்குமா?

- நடராசா லோகதயாளன்



**யா**ழ்ப்பாணம்-சென்னை இடையேயான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டு 100ஆவது விமான சேவையை நினைவுகூரும் முகமாக இந்த வாரம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் கேக் வெட்டி மகிழ்ச்சி வெளியிடப்பட்டது.

இந்த விமான சேவை இலங்கையின் வடக்கு மக்களிற்கு தனிப்பட்ட பயனம் மற்றும் வர்த்தகரீதியான நோக்கத்திற்கு கிடைத்த சேவை நல்லதொரு சேவை என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. இருப்பினும் அந்தச் சேவையின் முழுமையான பலனையும் வடக்கு மக்கள் அடைய இந்தியா மேலும் முயற்சியும் பங்களிப்பும் செய்ய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது.

யாழ்ப்பாணம்-சென்னை விமான சேவை ஆரம்பித்த தினத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான 100வது அலையன்ஸ் எயார் விமான சேவை வரையில் 10,500க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளனர் எனவும் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான இந்த விமான சேவை இருதரப்பு மக்களிடையே உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என இருநாட்டு அதிகாரிகளும் கூறுகின்றனர். மேலும், இச்சேவையின் மூலம் வர்த்தகத் தொடர்புகள் மேம்பட்டு, முதலீட்டை ஊக்குவித்து, சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் அதிகரித்து இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்த விமான சேவை உதவும் எனவும் கூறப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக வட மாகாணத்தின் பொருளாதாரம் உயர இந்த விமான சேவை பயன்படும் என்று ஒரு தரப்பில் கூறப்படுகிறது.


யாழ்ப்பாணம் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக அங்கீகரிக்கப்பட்டாலும், அதற்கான முழு இலக்கணங்களுடன் அது இல்லை என்ற விமர்சனம் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகிறது. அது பெயரளவில் சர்வதேச விமான நிலையமாக இல்லாமல், செயற்பாட்டின் அடிப்படையில் அப்படி இருக்க வேண்டும் என்று இந்த சேவையை பயன்படுத்தியவர்கள் கனடா உதயனிடம் தெரிவித்தனர்.

உண்மையில் யாழ்ப்பாணம் சென்னை இடையே தற்போது இடம்பெறும் விமான சேவையானது வாரத்தில் 4 தினங்கள் மட்டுமே இடம்பெறும் நிலையில் இதனை 7 தினங்களும. மேற்கொள்ள நடவடிக்கையும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. அது மட்டுமில்லாமல் தற்போது சேவையில் ஈடுபடும் ஏ.ரி.ஆர் 72 ரக விமானத்திற்குப் பதிலாக எயார்பஸ் ஏ320 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஏ.ரி.ஆர் 72 ரக விமானத்தில் தற்போது 60 பயணிகள் மட்டுமே பயணிக்க முடியும். மாறாக, எயார்பஸ் ஏ320 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் 150 முதல் 180 பயணிகள் வரை பயணிக்க முடியும். பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அப்பாற்பட்டு தற்போது ஒரு பயணிக்கு அனுமதிக்கப்படும் 20 கிலோ பொதி 40 கிலோவாகவும் அதிகரிக்க முடியும். அப்படிச் செய்தால் மட்டுமே இந்த விமான சேவை எதிர்பார்க்கப்படும் வரவேற்ப்பை பெற்று உரிய பலனை அளிக்கும் என்று மக்கள் கூறுகின்றனர். பயணப் பொதியின் அளவிற்காகவே தற்போது பலர் கொழும்பு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வருவதையும் காண முடிகிறது.



இதேநேரம் இந்த சேவையை தரமுயர்த்துவதில் சில அடிப்படை கட்டமைப்பு பிரச்சனைகளும் உள்ளன. தற்போது சேவையில் ஈடுபடும் ஏ.ரி.ஆர் 72 ரக விமானம் ஒன்று தரை இறங்குவதற்கு 1500 மீற்றர் ஓடுபாதை தேவையானபோதும் எயார்பஸ் ஏ320 ரக விமானங்கள் தரை இறங்குவதானால் 1800 முதல் 1900 மீற்றர் நீளமான ஓடுபாதை கண்டிப்பாக வேண்டும்.

அவ்வாறு 1900 மீற்றர் ஓடுபாதை வேண்டும் என்றால். அதற்கு கூடுதல் நிலம் தேவைப்படும் என்று ஒரு வாதம் வைக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பிரச்சனையை சமாளிக்க முடியும் என்று துறைசார் வல்லுநர்கள் கூறுகிறார்கள். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள பலாலியில் உள்ள விமான நிலைய ஓடு பாதையை விஸ்தரிக்க அமைக்க மேலும் நிலம் வேண்டும் எனவும் எண்ணத் தேவை கிடையாது. ஏனெனில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தற்போது 2000 மீற்றர் ஓடுபாதை கை வசம் உள்ளபோதும் 400 மீற்றர் ஓடுபாதையானது கல் மட்டும் போடப்பட்டு சீர் செய்யப்பட்டபோதும் ஓடுபாதையாக சீரமைக்கப்படவில்லை. அதனை சீர் அமைப்பதற்கு இன்றுள்ள நிலையில் வெறும் 4 மாதங்களே போதுமானது. ஆகவே ஓடுபாதை நீளத்தை அதிகரிப்பதில் சிரமங்கள் இருக்க முடியாது என்று அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.




இருந்தபோதும் அந்த பாதையை சீரமைப்பதற்கான செலவீனத்தை பொறுப்பேற்க அல்லது வழங்கி உதவ முன்வந்த இந்தியா ஏன் அப்பணியை நிறைவேற்றவில்லை மற்றும் ஏ.ரி. ஆர் 72 ரக விமானத்திற்குப் பதிலாக எயார்பஸ் ஏ320 ரக விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட இந்தியா ஆக்க பூர்வமான நடவடிக்கையை ஏன் முன்னெடுக்கவில்லை, அதற்கு என்ன தடை என ஆராய்ந்தபோது மேலும் ஒரு உண்மை புலப்பட்டது.



யாழ்ப்பாணம் சென்னைக்கான விமான சேவையில் ஈடுபடும் விமானத்தின் அளவை அதிகரித்து 150 பயணிகள் பயணிப்பதற்கு ஓடுபாதை புனரமைப்பு பணியில் உள்ள இடையூறு அல்லது கால தாமதத்தினை விடவும் பயணிகளிற்கான தரிப்பிட வசதிகளை அமைப்பதில் நெருக்கடி காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அதாவது தற்போது 55 பேர் பயணிப்பதனால் ஒரே நேரத்தில் விமான நிலையத்தில் 110 வரையானோர் தங்கி நிற்கின்றனர். இதற்குப் போதுமான இடவசதிகளே காணப்படும் நிலையில் 150 பேர் பயணிப்பதானால் ஒரே தடவையில் 350 பேர் தங்கி நிற்கும் வசதிகொண்ட அலுவலக, தரிப்பிட வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்த விஸ்டரிப்பிற்கு பெரும் தடையாக உள்ளது. அதற்கான பொருளாதர வளங்கள் இலங்கை அரசிடம் இல்லை என்பதை வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால், யாழ்ப்பாண விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான நிதி உதவிகளை வழங்க தாம் சித்தமாக இருப்பதாகவும், அங்கு முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளிக்கு நிதி வழங்குவதில் நெருக்கடிகள் ஏதுமில்லை என்று இந்திய வெளிப்படையாக தெரிவித்துள்ளது. இருந்தும், ஏன் விரிவாக்கப் பணிகளில் சுணக்கம் ஏற்படுகிறது என்பதற்கான பதில் இலங்கை தரப்பில் இல்லை.


பலாலி விமான நிலையத்தில், 350 பேர் தங்கி நிற்கும் இடவசதிக்கான கட்டிட அமைப்பிற்கான நிதியினையும் வழங்க இந்தியா தயாரானபோதும் இலங்கை தரப்பில் அதற்கு இன்னும் பச்சைக்கொடி காட்டவில்லை என அறியப்படுகின்றது. இதனை இலங்கை அதிகாரிகளும் வடக்கு அரசியல்வாதிகளும் சீர் செய்து வழங்க வேண்டும் என்பதும் தற்போதைய எதிர்பார்ப்பாகவுள்ளது.

ஏனெனில், தற்போது வடக்கு மா-காணம் அல்ல யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னை பயணிப்பவர்கள்கூட விமான கட்டணம் மற்றும் அத்துடன் இணைந்த பொதிகளின் எடை ஆகியவற்றை மனதிற்கொண்டே விமான சிட்டைகளை வேண்டுகின்றனர் என்று விமான சிட்டை முகவர்கள் கூறுகிறார்கள். யாழ்பாணம்-சென்னை மற்றும் கொழும்பு-சென்னை விமான கட்டணங்கள் கிட்டத்தட்ட ஒரே அளவில் உள்ளது, ஆனால் கொழும்பிற்கான பொதி அளவு கூடுதால உள்ளது என்பது அனைவராலும் சுட்டிக்காட்டப்படுகிறது. தேவையான அளவிற்கு சென்னையிலிருந்து பொருட்களை கொழும்பு கொண்டுவந்து, அவற்றை பேருந்துகள் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வருவது சுலபமானது, பொருளாதார ரீதியாக பயனுள்ளது என்று நான் பேசிய பலர் கூறினர்.

வடக்கு மக்களின் தலைநகரையும், தமிழகத்தின் தலைநகரையும் இணைக்கும் இந்த விமான சேவை மேலும் வலுப்பெற்று பயணிகள் போக்குவரத்து அதிகரித்து, வர்த்தக மேம்பாடுகள் அதிகரிக்க வேண்டுமென்ற என்ற வட மாகாண மக்களின் கனவு நினவாக வேண்டுமென்றால், இலங்கை-இந்தியா இரு நாடுகளும் கூட்டாக ஒரு செயற்திட்டத்தை விரைவாக முன்னெடுக்க வேண்டும். அதுவும் விரைவாக நடைபெற வேண்டும்.

இலங்கையில் அனைத்து துறைகளிலும் கால்பதித்து ஆக்கிரமிப்பு செய்துவரும் சீனாவும் நீண்ட காலமாக பலாலி விமான நிலையத்தை குறிவைத்துள்ளது. இந்தியா உரிய நடவடிக்கைகளை உடனடியாகச் செய்யவில்லை என்றால், சீன அதை செய்ய முன்வரக் கூடும். அதுமட்டுமின்றி, குறைந்த விலையில் போக்குவரத்து சேவைகளை நடத்தும் சீன விமான நிறுவனங்கள், தமது நாட்டின் தெற்கு நகரங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வர்த்த நோக்கத்தை மையமாகக் கொண்டு விமான சேவைகளை ஆரம்பிக்க எண்ணியுள்ளது என்று சீன தரப்பு தகவல்கள் கூறுகின்றனர். அபிவிருத்தி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வரும் சீனாவிற்கு கொழும்பைவிட யாழ்ப்பாணத்திற்கு அட்களையும், பொருட்களையும் கொண்டுவந்து இறக்குவது ஒப்பீட்டளவில் சுலபமாக இருக்கும். மேலும் மியான்மார், தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து பௌத்தமத சுற்றுலா வருபவர்களும் யாழ் விமான நிலையத்தை எதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடும். அந்த எண்ணிக்கை அதிகரிக்கும் போது சீனா விமான சேவையில் ஈடுபடும் வாய்ப்பு அதிகமுள்ளது என்று விமான் போக்குவரத்து அனுபவஸ்தர்கள் கூறுகிறார்கள்.

எனவே, 100ஆவது சேவையை கொண்டாடி கேக் வெட்டி மகிழ்வதோடு மட்டுமே இந்தியா நின்றுவிடாமல் எதிர்காலத்தில் இரு நாடுகளிற்கும் இடையே கேந்திர ரீதியில் வர்த்தகம் மட்டுமின்றி பாதுகாப்பு தொடர்பான பயணங்களிற்கும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஒரு முக்கிய கேந்திரமாக இருக்கும் என்பதை இந்தியா உணர்ந்து அதற்கேற்ற வகையில் உடனடியாக செயற்பட வேண்டும். அதுவே வட மாகாண மக்கள் மற்றும் இந்தியாவிற்கும் நன்மையைப் பயக்கும் என்பதே யதார்த்தம்.



# ரெயிலில் இருந்து மகாத்மா காந்தியை இறக்கிவிட்ட 130வது நினைவு தினம் தென் ஆப்பிரிக்க நிகழ்வில் இந்திய போர்க்கப்பல் பங்கேற்கிறது




மகாத்மா காந்தியின் வாழ்வில் இந்திய சுதந்திரத்திற்கான வேட்கையைத் தூண்டிய முதல் சம்பவம், அவர் தென் ஆப்பிரிக்காவில், பீட்டர்மாரிட்ஸ்பர்க் என்னும் ரெயில் நிலையத்தில், 1893ம் ஆண்டு நிறவெறி கொண்ட டிக்கெட் பரிசோதகரால் ரெயிலில் இருந்து இறக்கி விடப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இது நடந்து 130 வருடங்கள் ஆகிவிட்டன.

இதை முன்னிட்டு நடத்தப்படவிருக்கும் நினைவு நிகழ்ச்சிகளில், இந்திய கடற்படை பங்கேற்கிறது. இதற்காக கடற்படையின் போர்க்கப்பலான ஐ.என்.எஸ். திரிசூல் தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகருக்கு சென்றடைந்தது. பீட்டர்மாரிட்ஸ்பர்க் ரெயில் நிலையம் டர்பன் நகருக்கருகே அமைந்துள்ளது.

இந்திய சுதந்திரத்தின் முக்கியமான தருணங்களையும் நிகழ்வுகளையும், நினைவு கூர்ந்திடும் விதமாக, சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா என்னும் பெயரில் இந்திய கடற்படை கொண்டாடி வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே ஐ.என்.எஸ். திரிசூல் போர்க்கப்பலின் டர்பன் நகர பயணமும் அமைந்துள்ளதாக இந்திய ராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ராணுவ அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது: ஜுன் 6 முதல் 9 வரை இக்கப்பல் தென் ஆப்பிரிக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் 1893ம் வருடம் நிகழ்ந்த அச்சம்பவத்தை நினைவு கூரவும், இந்திய-ஆப்பிரிக்க உறவுகளில் ஒரு புத்தாக்கம் உண்டாக்கவும் இயலும். அப்பொழுது காந்தியின் நினைவுத் தூணுக்கு மலர்களால் அஞ்சலி செலுத்தப்படும்.

1893ம் வருடம் தாதா அப்துல்லா என்பவருக்கு வக்கீலாக ஆஜர் ஆவதற்காக பாரிஸ்டர் பட்டம் பெற்ற காந்தி டர்பன் நகருக்கு வந்திறங்கினார். ஜுன் 7, 1893 அன்று பிரிட்டோரியா செல்லும் வழியில் முதலில் பீட்டர்மாரிட்ஸ்பர்க் ரெயில் நிலையம் வரும் பொழுது, முதல் வகுப்பு பயணச்சீட்டு வைத்திருந்தும், ஒரு ஐரோப்பிய பயணியின் தூண்டுதலால், பரிசோதகரால் இறக்கி விடப்பட்டார். நிறவெறி உச்சத்தில் இருந்த அக்காலத்தில், முதல் வகுப்பு பயணம் வெள்ளையரல்லாதவர்களுக்கும், கூலி வேலை செய்பவர்களுக்கும் மறுக்கப்பட்டிருந்தது. காந்தி இனவெறிக்கும், நிறவெறிக்கும் எதிராக மிகப்பெரும் போராட்டம் தொடங்கவும், பின்னாளில் சத்யாகிரக போராட்டம் நடத்தவும் இந்த நிகழ்ச்சியே தொடக்கமாக அமைந்தது.

1997ம் வருடம் ஏப்ரல் 25 அன்று முன்னாள் தென் ஆப்பிரிக்காவின் அதிபர் நெல்சன் மண்டேலா தலைமையில் நடைபெற்ற ஒரு நெகிழ்ச்சியான விழாவில், மறைந்த காந்திக்கு "ப்ரீடம் ஆப் பீட்டர்மாரிட்ஸ்பர்க்" விருது வழங்கப்பட்டது. அப்பொழுது அடக்குமுறைக்கு எதிரான காந்தியின் தியாகத்தையும், ஈடுபாட்டையும் மண்டேலா நினைவு கூர்ந்தார்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தொவிக்கப்பட்டுள்ளது.




MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# தமிழகத்தில் ரூ.125 கோடியில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ரூ.125 கோடியில் அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொலியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.கடந்த 2022 மே 7ம் தேதி முதல்வர் ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு, சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ், ''ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கும் நோக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், 63 நகராட்சி பகுதிகளில் ரூ.177 கோடியில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக அமைக்கப்படும்'' என்று அறிவித்தார்.

இதில் முதல்கட்டமாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தலா ரூ.25 லட்சம் என மொத்தம் ரூ.125 கோடி செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில்ஒன்றான, சென்னை தேனாம்பேட்டை விஜயராகவா சாலையில்உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அங்கிருந்தபடி, மற்ற மையங்களை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்து முதல்வர் பேசியதாவது:திராவிட மாடல் ஆட்சியில் கல்வி, மருத்துவம் இரண்டையும் இரு கண்களாக போற்றி வருகிறோம். ஆனால், மிக பெரிய பொறுப்பில்



இருக்கும் ஒருவருக்கு மட்டும் இது புலப்படாமல், தொடர்ந்து விமர்சித்து வருகிறார்.

தேசிய அளவில் பல்வேறு சுகாதார குறியீடுகளில் முதல் 3 மாநிலங்களின் வரிசையில் தமிழகம் உள்ளதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும்.'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் இதுவரை 1.51 கோடி பயனாளிகளுக்கு முதல்முறை சேவைகள், 3.04 கோடி பேருக்குதொடர் சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை உலக சுகாதார அமைப்பே பாராட்டியுள்ளது. இதை அவர் படித்துப் பார்க்க வேண்டும்.கிண்டியில் கருணாநிதி நூற்றாண்டு விழாவையொட்டி, கலைஞர் நூற்றாண்டு நினைவு பன்னோக்கு மருத்துவமனை வரும் 15ம் தேதி திறக்கப்படுகிறது.500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தற்போது திறக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களில், ரூ.66 கோடி மதிப்பில் 172 வகை முக்கியமான மருந்துகளும், 64 வகை அவசியமான ஆய்வக சேவைகளும் ஆண்டு முழுவதும் தங்குதடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் நலவாழ்வு திட்டம் என்பது இந்தியாவுக்கே முன்னோடியான திட்டமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.மருத்துவம் நவீனமயமாக வேண்டும். புதிய நோய்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களாக நமது மருத்துவர்கள் செயல்பட வேண்டும். மருத்துவ ஆராய்ச்சிகள் நிறைய நடக்க வேண்டும். மருத்துவர்கள் மட்டுமின்றி, மருத்துவ வல்லுநர்களையும் உருவாக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் எப்படி ஏழை எளியோரின் நம்பிக்கையாக இருக்கிறதோ, அதை போலவே நகர்ப்புற நலவாழ்வு மையமும் செயல்பட வேண்டும். இவ்வாறு முதல்வர் பேசினார்.இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா, எம்.பி.க்கள் தயாநிதி மாறன், மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், சுகாதாரத் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# விழுப்புரம் திரௌபதி அம்மன் கோயிலுக்குள் பட்டியலின மக்கள் வழிபடும் உரிமையை நிலைநாட்டுக: சீமான்



"வேங்கைவயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் சொல்லவோ, சாதியத்தின் குறியீடாக இருக்கும் அந்தக் குடிநீர்த் தொட்டியை இடித்துத் தகர்க்கவோ முன்வராத திமுக அரசு, திரௌபதி அம்மன் கோயில் விவகாரத்தில் கோயில் வழிபாட்டுரிமையைப் பெற்றுத் தராது கோயிலையே முத்திரையிட்டு, மூடுவது எந்த வகையில் நியாயமாகும்?" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "விழுப்புரம் அருகே, பட்டியலின மக்கள் வழிபாடு செய்ய அனுமதி மறுக்கப்பட்ட மேல்பாதி திரௌபதி அம்மன் கோயிலுக்கு முத்திரையிட்டு, அரசதிகாரிகள் மூடியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

கோயில் என்பது அனைத்து மக்களுக்குமான பொதுச்சொத்து; அங்கு சென்று வழிபாடு செய்ய எல்லோருக்கும் சமவுரிமையுண்டு என்பதே சட்டம் முன்வைக்கும் சனநாயக நியதியாகும். சாதியைக் காரணமாகக் காட்டி, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு வழிபாடு செய்ய அனுமதி மறுப்பதும், கோயிலுக்குள் நுழையவே விடாது தடுப்பதும் எதன்பொருட்டும் ஏற்புடையதல்ல. அதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.பட்டியலின மக்களுக்குக் கோயிலுக்குள் நுழைந்து வழிபாடுசெய்ய அனுமதி மறுக்கப்படும் பொழுது சட்டத்தின் துணையோடு அவர்கள் உள்ளே நுழைய வழிவகை செய்வதும், வழிபாடு செய்ய வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதும்தான் சரியான நிர்வாக நடவடிக்கையாக இருக்க முடியும். அதனைவிடுத்து, கோயிலுக்கு முத்திரையிட்டு, அக்கோயிலை மொத்தமாக மூடுவது சிக்கலை மேலும் பெரிதுப்படுத்துமே ஒழிய, ஒருபோதும் தீர்வைத் தராது.

சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுமெனக் காரணம்கூறி கோயிலை இழுத்து மூடியிருப்பது அப்பட்டமான ஏமாற்று வேலை. இதன் மூலம் மக்களிடையே மேலும் பதற்றமும், இறுக்கமும்தான் உருவாகும். சாதியின் பெயரால் உரிமைகள் மறுக்கப்படும்போது, சக மக்கள் ஒடுக்கப்படும்போது ஆளும் அரசு உரிமையையும், நியாயத்தையும் நிலைநாட்ட வேண்டும்.அதை விடுத்து சிக்கலைக் கிடப்பில் போடுவது சனநாயகத் துரோகமாகும்.கேரளாவில் முன்னெடுக்கப்பட்ட வைக்கம் கோயில் நுழைவுப் போராட்டத்தின் நூற்றாண்டுக் கூட்டத்தில், திராவிடத்தின் பெருமையெனக் கூறி, சுயதம்பட்டம் அடித்துக் கொள்கிற திமுகவின் தலைவரும், முதல்வருமான ஸ்டாலின், தங்களது ஆட்சிக்காலத்தில் அனுமதி மறுக்கப்பட்ட பட்டியலின மக்களின் கோயில் வழிபாட்டுரிமையை நிலைநாட்டாது கோயிலைப் பூட்டுவது வெட்கக்கேடு.

சாதியத்தையும், தீண்டாமையையும் சமரசமின்றி எதிர்ப்போமென வாக்குறுதி அளித்துவிட்டு, சாதியவாதிகளின் செயலுக்குத் துணைபோகும் திமுக அரசின் இச்செயல் இழிவான அரசியலில்லையா? அற்ப அரசியலுக்காகவும், சாதிய வாக்குக்காகவும் இரட்டை வேடமிடும் திமுக அரசின் இத்தகைய சந்தர்ப்பவாதத்தின் பெயர்தான் 'திராவிட மாடல்' ஆட்சியா?பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்று தராது கோயிலையே மூடுவதுதான் திமுகவின் சமூக நீதிக்கொள்கையா? ஏற்கெனவே, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் குடிநீர்த்தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்ட விவகாரத்தில் 4 மாதங்களைக் கடந்தும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவோ. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் சொல்லவோ, சாதியத்தின் குறியீடாக இருக்கும் அந்தக் குடிநீர்த்தொட்டியை இடித்துத் தகர்க்கவோ முன்வராத திமுக அரசு, இக்கோயில் விவகாரத்தில் கோயில் வழிபாட்டுரிமையைப் பெற்றுத் தராது கோயிலையே முத்திரையிட்டு, மூடுவது எந்தவகையில் நியாயமாகும்? இதுதான் திராவிடம் சாதியத்தையும், தீண்டாமையையும் எதிர்க்கும் லட்சணமா? பேரவலம்.

ஆகவே, மேல்பாதி திரௌபதி அம்மன் கோயில் விவகாரத்தில் முத்திரையிடப்பட்டு, மூடப்பட்டதைத் திரும்பப் பெற்று, கோயிலைத் திறக்க வேண்டுமெனவும், காவல் துறையினரின் பாதுகாப்போடும், அரசதிகாரிகளின் துணையோடும் பட்டியலின மக்கள் கோயிலுக்குள் சென்று வழிபாடு செய்யும் உரிமை நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# பட்டமளிப்பு விழா நடைபெறாததற்கு ஆளுநரே முழு காரணம்: 9 லட்சம் மாணவர் பாதிக்கப்படுவதாக அமைச்சர் பொன்முடி குற்றச்சாட்டு

அரசு பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழா நடைபெறாமல் இருப்பதற்கு ஆளுநரே முழு காரணம். பட்டமளிப்பு விழா நடத்துவதற்கு ஆளுநர் தேதி வழங்காததால் 9 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.சென்னை தலைமைச் செயலகத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பல்கலை.களின் பட்டமளிப்பு விழாவுக்கு ஆளுநர் சிறப்பு விருந்தினர் ஒருவரை அழைத்து வருவார்.

அதன்படி இதற்குமுன் தமிழகத்தை சேர்ந்த முன்னாள் துணைவேந்தர்கள் போன்ற கல்வியாளர்களை வைத்துதான் பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டது.தற்போது ஆளுநர் வடஇந்திய பிரபலங்கள் மற்றும் மத்திய அமைச்சர்களை வைத்து பட்டமளிப்பு விழா நடத்த விரும்புகிறார். மத்திய அமைச்சர்கள் தேதி தருவதில் தாமதம் ஏற்படுவதால் விழா நடத்தாமல் உள்ளது. இதனால் அண்ணா பல்கலைக்கழகம் தவிர மற்ற 12 பல்கலை.களிலும் யாருக்கும் பட்டம் வழங்கப்படவில்லை.

அதாவது 2022ம் ஆண்டில் தேர்ச்சிபெற்ற 9 லட்சத்து 29,142 மாணவர்கள் பட்டம் பெற முடியவில்லை.இதனால் மாணவர்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அடுத்தகட்ட பணி பாதிக்கப்படுகிறது. குறிப்பாக வெளிநாடுகளுக்கு சென்று படிக்கும் மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ் அவசியமாகும். தற்போது சான்றிதழ் இல்லாததால் அவர்களும் தவிப்பில் உள்ளனர். எந்த விவகாரத்திலும் தமிழக அரசின் ஆலோசனையை ஆளுநர் பெறுவது கிடையாது.

பட்டமளிப்பு விழா நடைபெறாமல் இருப்பதற்கு ஆளுநரே முழு காரணம். அவர் எப்போது தேதி கேட்டாலும் கொடுக்க தயாராக உள்ளோம்.எனவே, மாணவர்கள் நலன்கருதி அனைத்து பல்கலைகளிலும் உடனடியாக பட்டமளிப்பு விழாவை நடத்த ஆளுநர் முன்வரவேண்டும்.அதேபோல், கோவை பாரதியார்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை தேர்வு செய்வதற்கு விதிகளின்படி தேடல் குழுவை கடந்த அக்டோபரில் தமிழக அரசால் அமைக்கப்பட்டது.

ஆனால், விதிமுறையைமீறி பல்கலை. மானியக்குழு தரப்பில் இருந்து ஒருவரை உறுப்பினராக நியமிக்க ஆளுநர் கூறுகிறார். அது தவறு. இதனால் இதுவரை அதை கிடப்பில் வைத்துள்ளார்.பள்ளிக்கல்வி, உயர்கல்வி என இரண்டிலும் தமிழகம் சிறப்பாக திகழ்கிறது. ஆளுநருக்கு இது தெரியவில்லை எனில் எங்களிடம் விளக்கம் கேட்கலாம். இதில் அவர் அரசியல் செய்து கொண்டிருக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# கடந்தவையும் கடப்பவையும் (60)

கூறியது கூறல் பெரும் குற்றம் - ஆனாலும்
போன இடம் திரும்பும் போது

தவிர்க்க முடியவில்லை அதனால் - மீண்டும்
தெரிந்த அந்தப் பாதையில் குட்டியாயொரு பயணம்

ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு முடிவதற்குள்
போகுமிடம் தூரமென்று நினைக்காது சேர்த்து விட

பருத்தித்துறைப் பெண்கள் உயர்தர பாடசாலைக்கு - மிக
நெருக்கமான பேருந்துகளில் போய்வந்த காலமதில்

கண்ணிவெடி அடுத்தடுத்துத் துரத்த
எண்ணியபடி படிப்பதற்கு முதற்தடை
அங்குதான் வந்தது - பின்

கிட்டவென்று வல்வை மகளிரில் விட்ட பொழுது - அங்கு
கொட்டிய குண்டுகள் எட்டமாய் ஓட வைத்தன

அகதிகளாய்ப் போனபோதும்
அதிக நாள் இருக்கவில்லை ஓரிடத்தில்

கோண்டாவில் இந்துதான் அண்மை என்று
கொண்டு போய் விட்டார்கள் - அங்கு

வாய் திறந்து கதைக்க ஆரம்பிப்பதற்குள்
போய் ஆகவேண்டும் தெல்லிப்பளை என்றார்கள்

அவகாசம் கொடுக்கவில்லை யூனியன் கல்லூரியில் சேர்த்தார்கள் -
ஒருவருடம்

ஆனபோது மறுபடியும் சொந்த இடம் என்றார்கள் - அங்கு
போனபின்தான் விட்டனரா? உடுப்பிட்டி மகளிர் என்றார்கள்

புகுந்த இடம் புதிய இடம் - முதல்
புகுந்தவர்கள் இன்னும் எழும்பவில்லை

இன்று நாளை என்று சொல்லுவது செய்தி - ஆனால்
அன்றும் அவர்கள் அங்குதான் ஒருபக்கம்

சப்பாத்தி சுடும் சத்தம் நாத்தமாய்
கப்பென்று ஒரு மணம் காற்றோடு கலந்துவரும்

பாடசாலை வளாகம்தான் ஒருபக்கம் அவர்கள் - ஆபத்துக்கு
ஓடவும் முடியாது ஆனாலும் அடுத்தபக்கம் நாங்கள்

தொண்டமானாற்றுப் பக்கம் போபவர்கள் சொல்லுவார்கள்
'கண்களோடு விசிலும் தான் அடிக்கிறார்கள்' என்று

என்னதான் செய்வது படிக்கவென வந்தாச்சு
சொன்னபடி பரீட்சையும் வரப்போது என்றார்கள்

இரண்டு வருடங்களில் ஒருவருடம் ஓட்டமாக - தொடக்க
ஆண்டின் அரைவாசி பாடம் மாறி கழிந்துபோக

ஆறுமாதம் போதுமா பரீட்சை எடுக்க - ஆனாலும்
வேணும் அதேயாண்டொடு பரீட்சை என

பிடிவாதமாக நிற்க கூடவந்த நட்புக்களின்
கடின உழைப்பும் ஊக்கம் கொடுக்க

மாணவரின் விருப்புக்கு மதிப்பளிக்கும் தியாகு அண்ணாவின் தனியார்
கல்விக்கூடமும்கைகொடுக்க

நடந்த அந்தப் பரீட்சையிலே சித்திபெற்று - ஒன்றாக
புகுந்து கொண்டோம் பலர் யாழ் பல்கலைக்குள்

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் தள்ளாடியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது பொசன் நிகழ்வு

- மன்னார் நிருபர் (04-06-2023)





பொசன் பண்டிகையை முன்னிட்டு மன்னார் தள்ளாடி சந்தியில் மன்னார் தள்ளாடி இராணுவ தளபதியின் வழிகாட்டல் மற்றும் பூரண மேற்பார்வையின் கீழ் இராணுவ பொசன் வலயம் ஞாயிற்றுக்கிழமை (4) பிரமாண்டமான முறையில் ஆரம்பமானது.

மன்னார் மாவட்டத்தில் வாழும் அனைத்து இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்கும் நோக்கில் இலங்கை இராணுவத்தினால் இந்த பொசன் வலயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர், பாதுகாப்பு திணைக்கள தலைவர்கள், சர்வமத தலைவர்கள், பொது மக்கள் என 4000 இற்கும் அதி-கமானோர் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துள்ளனர்.



மூன்று நாட்கள் நடத்த ஏற்பாடுகள் செய்த இந்த பொசோன் பிரதேசத்தில் அழகிய தோரண ராஜா, மிஹிந்தலா பிரதி போன்ற பல அழகிய விளக்குகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பக்தி பாடல் நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

இந்த பொசன் நிகழ்வு அப்பகுதி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்ததுடன் அனைத்து அம்சங்களையும் தமிழில் விளக்கியமை அப்பகுதி மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இந்த பொசன் பிரதேசத்தை ஒழுங்கு படுத்துவது தொடர்பில் இலங்கை இராணுவம் பிரதேசத்தின் அனைத்து உயர் அரச அதிகாரிகள் மற்றும் சமயத் தலைவர்களின் அங்கீகாரத்தைப் பெற்று அப்பிரதேசத்தின் மத நல்லிணக்கத்திற்கும் ஒத்துழைப்பிற்கும் பெரும் உதவியாக இருப்பதாக அனைவரும் கருத்து தெரிவித்தனர்.

# அன்பின் தொனி - 693

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**

**ஜெபிக்க வேண்டியது ஒரு கட்டளை** - Praying is a Command

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள், அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். - **ஏசாயா 55: 6**

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும், ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப் பது அதிக நிச்சயம் அல்லவா? - **மத்தேயு 7: 7-11**

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்: ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்ளூ அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள், அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசு வாசத்தைக் காண்பாரோ என்றார். - **லூக்கா 18: 1-8**

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத் திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார். - **லூக்கா 21: 36**

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண் டிருங்கள். - **எபேசியர் 6: 18**

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். - **பிலிப்பியர் 4: 6**

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். - **கொலோசியர் 4: 2**

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். - **1 தெசலோனிகேயர் 5: 17**

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும், நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத் தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். - **1 தீமோத்தேயு 2: 1-2**

**உற்சாகப்படுத்தும் ஜெபம்** - Encouraging Prayer

அவன் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, அவன் அவருடைய சமுகத்தைக் கெம்பீரத்தோடே பார்க்கும்படி அவர் அவன்மேல் பிரியமாகி, அந்த மனுஷனுக்கு அவனுடைய நீதியின் பலனைக் கொடுப்பார். - **யோபு 33: 26**

கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார், கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார். - **சங்கீதம் 6: 9**

**தொடரும்...**









மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1051

## கறுப்பளை பத்ரகாளி அம்பாள் ஆலயம் பொலநறுவை

*" உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லீரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருட்தரித்த நாதர் பாதம் அம்மை பாதம் உண்மையே "*

உலக இயக்கம் அனைத்திற்கும் சக்தியே காரணம் என்பதை விளக்கும் வகையில், "சக்தியிருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று சும்மா இரு" என்ற வாக்கு தமிழிலே காணப்படுகின்றது. இவ்வாறான முன்னோர் வாக்குக்கள் சக்தியின் உயர்நிலையை, ஆதாரத்தை எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றன. சிவம் அமைதியானது, சும்மா இருப்பது. அதனை இயக்குவது சக்தியே எனவும் கூறுவர். ஆயினும், நெருப்பிலே சூடுபோல பரம்பொருளாகிய சிவத்துடன், சக்தி இரண்டறக் கலந்துள்ளாள். ஒன்றான சிவம் ஆருயிர்களின் மேற் கொண்ட கருணையின் காரணமாக சிவம் சக்தியென இருகூறாக விளங்குனின்றது.

இறைவனுடன் இரண்டறக் கலந்திருக்கும் சக்தியானவள், அடியவர்க்கு அருள்புரிய வேண்டி, பலவிதத் திருக்கோலங்களை எடுத்தருளுகின்றாள். அம்பிகையை அகில உலகத்திற்கும் தாய் என்ற கருத்திலே, அவளை அகிலலோக ஜனநி என அழைப்பர். உலகிலே தெய்வ வழிபாடு தாய் வழிபாட்டிலிருந்து ஆரம்பமானதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒவ்வொரு அம்சமாக சக்தி காணப்படுகின்றாள். இவற்றுள் பத்தரகாளி அம்சமும் ஒன்றாகும்.

சிவபெருமானை அவரது அடியார்கள் சேர்வதற்கு சக்திதான் துணை என உமாபதி சிவாச்சாரியார் எடுத்துரைத்துள்ளார். உலகியலிலே தந்தையைப் பிள்ளைக்குக் காட்டுபவளாக தாய் அமைகின்றாள். தாய்தான் தந்தையின் பெருமையை பிள்ளைகளுக்கு ஊட்டுகின்றாள். பிள்ளைகள் செய்யும் எந்தத் தவறையும் மன்னித்து வழிகாட்டும் தாய்போல, சக்தியானவள் எல்லா ஜீவராசிகளுக்கும் தாயாக விளங்கி இறைவனைச் சேர வழிகாட்டுகின்றாள்.


பிரார்த்தனை செய்யும் பக்தர்களுக்கு அருள் செய்பவளாக துர்க்காதேவி காணப்படுகின்றாள். இவள் சிவப்பிரியை. இவள் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவள். புகழ், உயர்வு, மோடச்ம், மங்களம், சுகம் போன்ற அனைத்தையும் வழங்குபவள். தன்னைச் சரணடைந்தவர்களை தாயாகிக் காப்பவள். சகல சக்திகளின் வடிவமாக விளங்குபவள். அதேநேரத்தில் சகல பிரபஞ்சங்களையும் ஒரே கணத்தில் அழிக்கக்கூடிய பிரகிருதியாக துர்க்கை விளங்குகின்றாள். துர்க்கையின் முகத்திலிருந்து பகுதியம்சமாக, சும்பநிசும்பர்களின் பெரும் போராட்டத்தின்போது, காளிதேவி தோன்றியதாக புராண வரலாறுகளிலே கூறப்பட்டுள்ளது.

சகல குணங்களிலும் துர்க்காதேவிக்கு சமமானவளக பத்தரகாளி அன்னை காணப்படுகின்றாள். சக்திகளுள் மிகவும் வலிமை மிக்கவள். சகல சித்திகளையும் கொடுப்பவள் என போற்றப்படுகின்றாள். கிரு'ணரிடம் பக்தி கொண்டதோடு அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை, தன்னை ஆராதிக்கும் அடியவர்களுக்கு அருளுபவளாக, பத்ரகாளி அன்னை காணப்படுகின்றாள்.

ஆதிபராசக்தியின் ஓர் அம்சமான காளி, தர்மத்தை நிலைநிறுத்தி அதர்மத்தை அழிக்கும் வீரசக்தியாகப் புராணங்களிலே போற்றப்படுகின்றாள். சிவனை மதியாது தட்சயாகம் நடைபெற்றபோது, அதனை அழித்து நீதியை நிலைநாட்ட, பரம்பொருளாகிய சிவன், வீரபத்திரரை தோற்றுவித்தார். இவர் யாகத்தைத் துவம்சம் செய்தபோது, தந்தையின் அடாத செயலைப் பொறுக்க முடியாத தாட்சாயணி, ஓமகுண்டத்திலே குதித்து தன்னை ஆகுதியாக்கினாள். அப்போது அன்னையின் திருவுடல் ஐம்பத்தியொரு துண்டுகளாக உடல் சிதறி பூவுலகிலே வீழ்ந்தது. இவ்வாறு விழுந்த இடங்களில் காளி வழிபாடு, பிரசித்தி பெற்ற வழிபாடாகக் காணப்படகின்றது. வங்காளம், அசாம், போன்ற கிழக்கு மாகாணங்களில் காளி வழிபாடு சிறப்படைந்து காணப்படுகின்றது.

அரக்க சக்திகளை அழிக்கும் சக்தியாக விளங்கும் காளிதேவி, அறிவின் பேராற்றலை அருளும் தலைவியாகவும் காணப்படுகின்றாள். அறிவிலியாகத் திரிந்த பித்தனை காளி தனது அருட்காட்சத்தினால், மகாகவி காளிதாசன் ஆக்கினாள். தாயினும் சாலப் பரிந்து காக்கும் தெய்வம் என் அன்னை காளி என, ராமகிருஷ்ண பரமஹம்சர் போற்றுகின்றார். தீமைகளை எதிர்க்கும் மனத்துணிவையும், வீரத்தையும் தருபவள் காளிமாதா என, விவேகானந்தர் போற்றித் துதிக்கின்றார். காளி என்னும் சக்தியின் ஆற்றலே நமது விடுதலைக்கு வழிகாட்டவல்லது என பாரதியார் துதிக்கின்றார். காளியின் பெருமையை எடுத்தியம்புகின்றது. இவ்வாறான அருமை பல கொண்ட பத்ரகாளி அம்பாள் ஆலயம், பொலநறுவை மாவட்டத்தில் கறப்பளை என்னும் இடத்திலே அமைந்து காணப்படுகின்றது.

- தொடரும்...




MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

### மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

**30வது பொங்கும் பொழுது விழா - June11, 2023.**

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடாத்தும் பொங்கும் பொழுது விழா ஜூன் 11 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 5:30 மணி தொடக்கம் இரவு 10:30 மணி வரை 1120 Tapscott Road Unit 3, Scarborough, வில் அமைந்துள்ள தமிழிசைக்கலா மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர் உரை, விழா சஞ்சிகை வெளியீடு, திரையிசைப் பாடல்கள், வீணை இசை, நடன நிகழ்ச்சிகள், ஆகிய நிகழ்சிகளோடு பழைய மாணவர் கலந்துரையாடுவதற்குரிய சந்தர்பங்களுக்கும் இடம் அளிக்கப்படும்.

இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள், மாணவிகள் அவர்தம் வாழ்க்கைத் துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.

தொடர்புகட்கு:

| | | |
|---|---|---|
| ராஜு கனகராஜா | ச.வசந்தராஜன் | செ.பார்த்திபன் |
| தலைவர் | உப தலைவர் | செயலாளர் |
| (416- 858 6316) | (416-289 9008) | (647-710-9404) |

# இவ்வார ராசிபலன்

## 09-06-2023 வெள்ளி தொடக்கம் 15-06-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வாய்ப்புக்கள் தேடி வரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். உள்ளம் மகிழும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். காரியம் கை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். வசந்தம் தேடி வரும். பெருமைகள் பெருகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத்தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புத் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R




**ரிஷபம்:** வார்த்தைகளில் நிதானத்தை கடைப்பிடிக்கும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாயப் பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன அமைதி உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூக சீர்நிலை உண்டாகும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். புகழ் கூடும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேய் நலம் கூடும். குடும்ப சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்டஎண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** உறவுகளால் பெருமை சேரும். தனவரவு பெருகும். உணவு பிரியம் ஏற்படும். பாராட்டுப் பெருகும். உடல் நலம் திருப்தி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டாகும். எண்ணிய காரியம் கைகூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். குழப்பங்கள் நீங்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்யம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். கால்நடையால் பலன் உண்டு. வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். நன்மைகள் அதிகரிக்கும். குடும்ப கௌரவம் உயரும். கமின் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,J




**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்புக் கிட்டும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். நிம்மதி பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றித் தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லைக் குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டுப் பெறுவீர்கள். உடல் நலம் சீராகும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றத்தால் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பழையகடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு அவசியம். மனஉற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். புகழ்ச்சி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் நல்லது. தங்க நகைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**சிம்மம்:** பிரபல்ய வாய்ப்பு அமையும் வாரம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திரச் சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். தொல்லைகள் அகலும். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகள் தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புகள் அகலும். வேலைப்பளு அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கூட்டுப்பிரார்த்தனை மாற்றம் தரும். வழிபாடு மாற்றம் தரும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்புகள் கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,S




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். காரிய வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியைத் தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமி'ன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. பொருளாதாரம் உயரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். நிம்மதியாக இருப்பீகள். திருத்தமான முடிவு ஏற்படும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மை உண்டு. காதல் கசக்கும். நல்லோர்களின் நட்பு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பழையகடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,6,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. சந்தோஷம் பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் சேரும். திருப்புமுனைகளை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**விருச்சிகம்:** தன்னடகத்தோடு செயல்படும் வாரம். புதிய வாய்ப்பு வரும். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் கூடும். முயற்சிகள் பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். குடும்ப வளர்ச்சி அடையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. ஜவுளித்தொழில் உயர்வு தரும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொருளாதாரம் உயர்வு பெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,P

(தொடர்ச்சி 30 பக்கம்)

கனடிய செய்திகள் Canadian News

# எனக்கு தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருதினைப் பெறுகின்ற தகைமை பெறுவதற்கு காரணமாக விளங்கிய நூலை எழுத நான் 16வேருடங்களை ஒரு தவமாக ஏற்று வெற்றியைத் தழுவியுள்ளேன்

## கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கிய விருதினைப் பெற்றுக் கொண்ட எழுத்தாளர் சிவசங்கரியின் உருக்கமான உரை













"உலகத் தமிழ் படைப்பாளிகளின் கனவாகவும் எதிர்பார்ப்பாகவும் திகழும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருதினைப் பெறுகின்ற தகைமையை நான் பெறுவதற்கு காரணமாக விளங்கிய "இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு" என்னும் நூலை எழுத நான் 16 வருடங்களை ஒரு தவமாக எடுத்துக் கொண்டு எழுத்துப் பணியை மேற்கொண்டதால் இன்று வெற்றியைத் தழுவிய ஒருத்தியாக உங்கள் முன்னாள் நிற்கின்றேன். அந்த அங்கீகாரத்தை வழங்கிய கனடா "தமிழ் இலக்கியத் தோட்டம்" அமைப்பின் நிறுவனரும் உலகறிந்த எழுத்தாளருமான "அ. முத்துலிங்கம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்".

இவ்வாறு கடந்த 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்து த எஸ்டேட் விழா மண்டபத்தில் நடைபெற்ற "தமிழ் இலக்கியத் தோட்ட"த்தின் 2022 இலக்கிய விருதுகள் வழங்கும் விழாவில் மேற்படி "இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு" என்னும் நூலை எழுதியமைக்காக "இந்திய இலக்கிய தரிசன விருது" என்னும் உயரிய கௌரவத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் உரையாற்றியபோது உருக்கத்துடன் தெரிவித்தார் எழுத்தாளர் சிவசங்கரி அவர்கள்.

"தமிழ் இலக்கியத் தோட்டம்" அமைப்பின் தலைவர் மனுவல் ஜேசுதாசன் அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் வாழ்த்துரை வழங்கினார்.

விழாவின் பிரதம விருந்தினராக எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளரும் பன்முகத் திறன் கொண்டவரும் என்னும் ஆங்கில நூலின் ஆசிரியருமான அவர்களும் சிறப்பு விருந்தினராக விருது பெற்ற ஆங்கில எழுத்தாளர் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தார்கள்.

அவர்களது மிகச் சிறந்த உரைகளும் ஆங்கிலத்தில் இடம்பெற்றன.

2022 ஆம் ஆண்டிற்கான இலக்கிய விருதுகளைப் பெற்று கொண்ட வெற்றியாளர்களின் விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

தமிழக எழுத்தாளர் பாவண்ணன் மற்றும் அவுஸ்ரேலியா வாழ் எழுத்தாளர் லெ. முருகபூபதி ஆகியோருக்கு இயல்விருதுகள் வழங்கப்பெற்றன.

சிறந்த புனைவு எழுத்தாளருக்கான விருது வேல்முருகன் இளங்கோ அவர்களுக்கும் அபுனைவு எழுத்தாளருக்கான விருது சாம்ராஜ் அவர்களுக்கும் "இந்திய இலக்கிய தரிசன விருது" எழுத்தாளர் சிவசங்கரி அவர்களுக்கும் கவிதைக்கான விருது சுகிர்தராணி அவர்களுக்கும் இலக்கியச் சாதனைக்கான விசேட விருது கனடா வாழ் வி. என். கிரிதரனுக்கும் வழங்கப்பெற்றன.

இந்த விருதுகள் வழங்கும் வழங்கும் விழாவை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பின் நிறுவனர் அ. முத்துலிங்கம் அவர்களுக்கும் இயக்குனர் சபை உறுப்பினர்களுக்கும் "கனடா உதயன்" தனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது.



## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும் வாரம். கையிருப்புகள் அதிகமாகும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையகடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். சந்தோஷம் கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை உண்டு. வாகனச்செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எள் தானம் ஏற்றம் தரும். மற்றவர்கள் ஆலோசனையை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். தொழிலில் முதலீடு உண்டாகும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் கிடைக்கும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் உண்டு. உறவினரால் பாதகம் உண்டு. தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அந்நிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை மேலோங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L

**மகரம்:** வாழ்க்கையில் உதாரணமாக திகழும் வாரம். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சிக்கனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். கடன் வசூலாகும். சாதனையை படைப்பீர்கள். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். வெகுமதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R

**கும்பம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களின் உதவி கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கை கூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கை கூடும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாமதேனு, அதிர்ஷ்ட எண்: 8,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,U

**மீனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வாழ்த்துக்கள் கிட்டும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஊக்கம் அதிகரிக்கும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையகடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். ஆடம்பர எண்ணம் உருவாகும். உலோகத்தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். தாய்நலனில் கவனம் தேவை. வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். பாவங்கள் போக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: எழுத்துக்கள்: K,U

# "ஒடிசா ரெயில் விபத்திற்கானமூல காரணம் தெரிந்தது"

### - ரெயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தகவல்




ஒடிசாவில் ஜூன் 2ஆம் தேதி நடந்த ரெயில் விபத்திற்கான மூலக் காரணம் என்னவென்பது தெரியவந்துள்ளது என்று ரெயில்வே அமைச்சர் அஷ்வினி வை'ணவ் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் இருந்து ஜூன் 2 பிற்பகல் 3.20 மணிக்கு புறப்பட்ட ஷாலிமார் - சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில், இரவு 7 மணி அளவில் ஒடிசாவின் பாலசோர் - பத்ரக் ரயில் நிலையங்கள் இடையே பாஹாநாகா பஜார் பகுதியில் வந்து கொண்டிருந்தது.

3 ரெயில்கள் மோதல்

அப்போது, பிரதான தண்டவாளத்தில் இருந்து இணைப்பு தண்டவாளத்துக்கு ரயில் மாறியுள்ளது. இணைப்பு தண்டவாளத்தில் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்குரயில் மீது கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் பயங்கர வேகத்தில் மோதியது.

இதில் சரக்கு ரயிலின் 2 பெட்டிகளை துளைத்து 3-வது பெட்டியின் மீது பயணிகள் ரயிலின் இன்ஜின் ஏறியது. மோதிய வேகத்தில், கோரமண்டல் ரயிலின் 21 பெட்டிகள் தடம் புரண்டு, 3-வது தண்டவாளத்தின் குறுக்கே நின்றன.

அதே நேரம், பெங்களூருவில் இருந்து ஹவுரா செல்லும் சூப்பர்ஃ பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் எதிர்திசையில் அதே பகுதியில் அதிவேகமாக வந்து கொண்டிருந்தது.

அப்போது, தண்டவாளத்தின் குறுக்கே நின்றிருந்த கோரமண்டல் ரயில் பெட்டிகள் மீது பெங்களூரு - ஹவுரா ரயில் பயங்கரமாக மோதிதடம் புரண்டது. இந்த விபத்தில் கோரமண்டல் ரயிலின் 3 பெட்டிகள், ஹவுரா ரயிலின் 2 பெட்டிகள் முற்றிலுமாக உருக்குலைந்தன.

2 பயணிகள் ரயில், ஒரு சரக்கு ரயில் மோதிய பயங்கர விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 275 ஆக அதிகரித்துள்ளது. 1,000-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

விசாரணை முடிந்தது

ரெயில் விபத்துப் பகுதியில் நடக்கும் சீரமைப்புப் பணிகளை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் ஞாயிறு காலை நேரில் ஆய்வு செய்தார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:

"மிக மோசமான இந்த ரயில் விபத்து குறித்த விசாரணை முடிவடைந்தது. ரயில்வே பாதுகாப்பு ஆணையர் விரைவில் அறிக்கையை தாக்கல் செய்வார். விபத்திற்கான காரணம் என்ன? அதில் யாருக்கு பங்கு? என்பதைக் கண்டறிந்துவிட்டோம். எலக்ட்ரானிக் இன்டர்லாக்கிங் பிரச்சினையால் இந்த விபத்து நடந்துள்ளது. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முழுமையான தகவல்கள் வெளியாகும்."

இவ்வாறு அவர் கூறினார்.

ரயில்வே பாதை சீரமைப்புப் பணியில் 1000க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எலக்ட்ரானிக் இன்டர்லாக்கிங் என்றால் என்ன?

இந்திய ரயில்வேயில் முன்பு ரிலே இன்டர்லாக்கிங் முறை தான் செயல்பாட்டில் இருந்தது. தற்போது எலக்ட்ரானிக் இன்டர்லாக்கிங் சிக்னல் அமைப்பு செயல்பாட்டில் உள்ளது. இது கணினி வாயிலாக மாற்றத்தக்கது. இந்த நவீன தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே விபத்து நடந்துள்ளது.



# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL
VACANT LAND CONSTRUCTION




| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank | TD Canada Trust | RFA | FIRST NATIONAL FINANCIAL LP | MCAP | HOME TRUST | EQUITABLE BANK | radius financial | RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
canada

www.nesan.ca

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
• 905-808-9930
5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
• 905-783-1895
3470 PLATINUM DRIVE. UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1418 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 9, 2023

# உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா — 2023

நமது கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் 17வது ஆண்டாக நடத்தும் “உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா-2023. எதிர்வரும் யூன் 18ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறுகின்றது இரண்டு வெளிநாட்டு விருதாளர்களோடு ஐந்து கனடா வாழ் விருதாளர்களும் கௌரவிக்கப்பெறுகின்றார்கள். “இளையோர்களுக்கான அடையாளம்“ விருதுகளை ஒன்றாரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற இரண்டு இளம் வெற்றியாளர்கள் பெறுகின்றார்கள்.

**uthayannews@yahoo.com or www.uthayannews.ca**
**416 732 1608**

# அல்பேர்ட்டா மாகாணத்தில் தொடரும் காட்டுத் தீயின் மோசமான பரவலால் கனடா அமெரிக்காவின் சில பகுதிகளில் வளிமண்டல பாதிப்பு

## நோய்கள் பரவலாம் என்ற அச்சத்தை வெளியிட்டுள்ள கனடிய — அமெரிக்க சுகாதார அமைப்புக்கள்



கனடா அல்பேர்ட்டா மாகாணத்தில் கடந்த சில மாதங்களாகத் தொடரும் காட்டுத் தீயின் மோசமான பரவலால் கனடா அமெரிக்காவின் சில பகுதிகளில் வளிமண்டலத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை மக்கள் நன்கு உணரக்கூடியதாக இருப்பதாகவும் இதனால் இரண்டு நாடுக-ளில் சில நகரங்களில்நோய்கள் பரவலாம் என்ற அச்சத்தை வெளியிட்டுள்ள கனடிய மற்றும் அமெரிக்க சுகாதார அமைப்புக்கள் மக்களை கவனமாக இருக்கும் வண்ணம் கேட்டுள்ளன.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)



# மார்க்கம் Seniors' Wellness Club மூத்தோர் அமைப்பின் அன்னையர் தின — தந்தையர் தினக் கொண்டாட்டங்கள்

மார்க்கம் நகரில் இயங்கிவரும் **Seniors' Wellness Club** மூத்தோர் அமைப்பு நடத்திய அன்னையர் தின மற்றும் தந்தையர் தினக் கொண்டாட்டம் நேற்று மார்க்கம் நகரில் உள்ள மவுண்ட் ஜோய் ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவி திருமதி செல்வா அருள்ராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பல மூத்தோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)

# இலங்கை பொலிசாரின் அடக்குமுறை: கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காலை கொழும்பில் கைது: மாலை கிளிநொச்சியில் விடுதலை!

**யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

கொழும்பில் புதன்கிழமை (7) காலையில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாலையில் கிளிநொச்சி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். முன்னதாக காலை அவரது வீட்டிற்கு சென்ற இலங்கை பொலிசார் கடுமையான வாக்குவாதங்களிற்கு பிறகு அவரை கைது செய்து, மருதங்கேணிக்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து தமக்கு அளிக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே அவரை கைது செய்வதாக பொலிசார் கூறினாலும், அதற்கான உத்தரவு எதையும் அவர்கள் காட்டவில்லை என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)



# Eligible travellers from 13 more countries now qualify for visa-free travel to Canada

# உலகின் மேலும் 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள் தற்போது விசா இன்றி கனடாவுக்கு பயணம் செய்யலாம்

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker

உலகின் மேலும் 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள், 6.6.2023 முதல் விசா இன்றி கனடாவுக்கு பயணம் செய்யலாம். என கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் விவகாரங்கள். பிரஜாவுரிமைகள் துறை அமைச்சர் **Sean Fraser** வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)